139965

# திருக் கழுக்குன்ற தல புராணம்

Q23:38211217k
N13
139965

1

உ

சிவமயம்.

# திருக்கழுக்குன்ற

# தலபுராணம்.

275
2.13

இஃது

பழயபிரதிக்கிணங்க

ஆழூர். நாராயணசாமி நாயகர்

குமாரர்

ஆ. நா. ஜகந்நாத நாயகரவர்களால்,

அணைவை - கந்தசாமி முதலியாரது,

சென்னை:

ரிச்சினர் அச்சியந்திரசாலையில்,

பதிப்பிக்கப்பட்டது.

1913.

501
294.535



உ

சிவமயம்.

ஸ்ரீ வேதகிரீஸ்வாமி லிங்கசுவரூபம்.

# திருக்கழுக்குன்ற தலபுராணம்.

## நேரிசை வெண்பா.

நல்லதெலாம் வந்தெய்தும் நம்பு மடியவர்கள்
தொல்லையெலாம் விட்டுத் தொலையுமே—வல்ல
மதுரமொழி மாதுமையாள் மைந்தனர விந்த
பதமலரைப் பற்று பவர்க்கு.

சீர்நிறைந்த சிந்தை சிதையாமற் செவ்வனே
நீர்நிறைந்த வேணி நிமலனை—ஓர்ந்து
நெறியால் கழுக்குன்றம் நின்று நினைவார்க்குக்
குறியால் வரங்கொடுக்குங் குன்று.

## புராணவரலாறு.

சிருஷ்டிகர்த்தாகியபிர்ம்மதேவரை சவுனகராதி நாற்பத்தெண்ணாயிர மஹாமுனிவர்களும் அன்போடு புகழ்ந்து எங்களுக்குத் தபோமார்க்கத்தையும், தவஞ் செய்வதற்குப் பரிசுத்தமான ஓரிடத்தையும் தேவரீர் கட்டளையிடவேண்டுமென்று பிரார்த்தித்

129965



தனர். அதைக்கேட்டு பிர்ம்மதேவர் உங்களால் உபாசிக்கத்தக்கவர் இந்நிலையாக்கைக்கடந்த நிரவதிகமகிமையுடையசிவபெருமானேயாவர் என்று உபதேசமார்க்கங்களைப்போதித்து பின்பு ஒரு தருப்பையெடுத்துவட்டமாகமுடிந்து அதைப்பூமியில்விட்டு இத்தருப்பையைச் சக்கரம்போய்த் தங்கும் இடமே நீங்கள் தவஞ்செய்வதற்குப் பரிசுத்த ஸ்தானமென்று திருவாய்மலர்ந்தனர். அத்தருப்பை நேமியின்பின்னே முனிகணங்கள்போய் அதுதங்கினவனத்திலிருந்து தவஞ்செய்தார்கள். அந்தக் காரணத்தினாலேநைமிசாரண்யமென்று அவ்வனம் பெயர்பெற்றது. மல்லிகை முல்லை இருவாக்ஷிமுதலிய நந்தவனங்களாலும் சந்தனம், பாரிஜாதம், புன்னை, பாதுளை, அசோகு, இலந்தை, கொன்றை முதலிய விருக்ஷங்களாலும், அதிபரிசுத்தமான திவ்யதீர்த்தங்களுள்ள தாமரைத் தடாகங்களாலும், அவ்வனம் சூழப்பட்டுள்ளது. தவமுதிர்ந்த அம்முனிவர்கள் முன்பாகப் பரமசிவ அநுக்கிரகத்தால் வேதவியாசர் சிஷ்யராகிய சூதமாமுனிவர் எழுந்தருளினர். திருமேனிமுழுதும்விளங்கும் விபூதிகாந்தியும் ஆநந்தபாஷ்பம் பெருகின்ற கண்களும், ருத்திராக்ஷமாலை தரித்த அத்தியற்புதகாட்சியும், சிவாநந்தாநுபவத்தால் விளங்கும் முககாந்தியுமுடைய அச்சூதமுனிவரை நைமிசாரண்யவாசிகளான முனிவர்கள் உபசரித்துத்தோத்திரஞ்செய்து அழைத்துவந்து ஆசனத்திலெழுந்தருளச் செய்து வினவுகின்றார்கள். ஸ்ரீ கைலாசபதியாகிய சிவபெருமான் பூமண்டலத்தில் எழுந்தருளியிருக்கின்ற காசி, திருக்கேதாரம், திருக்கோகரணம் முதலிய ஸ்தலங்களின் மகிமைகளையும், கங்கைமுதலிய தீர்த்தங்களின் மகிமைகளையும், பூர்வம் கட்டளையிட்டருளினீர். இப்போது திருக்கழுக்குன்ற ஸ்தலமகிமையும் திருவாய் மலரவேணுமென்று விண்ணப்பித்தார்கள். அதைக்கேட்ட சூதமாமுனிவர் அக்கினியிற்பட்ட மெழுகுபோல் மனங்கசிந்துருகி இருகரங்களையும் சிரமேற்குவித்து ஸ்ரீ வேதகிரீசரைத் தியானித்து ஒரு முகூர்த்தம் சித்திரம்போல் அசைவற்றிருந்து, சௌநகராதி முனிவர்களைப்பார்த்துக் கட்டளையிடுகின்றார், நினைக்குந்தோறும் நினைக்குந்தோறும் மனதை உருகச்செய்யும் வேதாசலத்தின் மகிமையைத் தெரிந்துக்கொள்ளும்படி உங்கள் மனதிலுதித்தது. நீங்கள்செய்த தவமேயாம். அத்தலத்தின் மகிமையைச் சிவபிரானே திருநந்திதேவருக்கு உபதேசித்தருளினர். வேதங்கள் பூசித்தகாரணத்தால் அத்தலம் வேதகிரியென்று வழங்குகின்றது. கோடிருத்திரர்கள் பூசித்த

W13



காரணத்தால் ருத்திரகோடியென்றும், வசிஷ்டாதி முனிகணங்கள் பூசித்ததால் முனிகணநாதபுரமென்றும் வழங்குகின்றது. அத்தலத்தின் மகிமையைக் கேட்பீர்களென்று திருவாய்மலரத் தொடங்கினர்.

புராணவரலாறு முற்றியது.

## திருக்கயிலாயச் சருக்கம்.

சமஸ்த அண்டவாசிகளும் செய்கின்ற தவங்களெல்லாந் திரண்டு தவளப்பிரகாசமிருந்து, ஒரு பர்வதவடிவமானது போலவும், அநேக சந்திரர்களுடைய குளிர்ந்த கிரணதாரைகளெல்லாம் ஓரிடத்தில் சேர்ந்தன போலவும், திருக்கயிலாசமானது சதா விளங்கிக்கொண்டிருக்கும் அதன் சாரலில் மகாமுனிவர்கள் சூழ்ந்து ஆநந்தபாஷ்பம் பெருகுகின்ற கண்களோடு சிவபெருமானை உள்ளும் புறம்புந்தியானித்துக்கொண்டிருப்பார்கள். சமஸ்தமான தேவர்களும் சித்தர்களும் கந்தருவர்களுஞ்சூழ்ந்து தோத்திரஞ்செய்து, சமயமறிந்து பரமசிவத்தைத் தரிசித்து வேண்டியவரங்களைப்பெறும் பொருட்டுக் காத்திருப்பார்கள். வாசனைவீசுகின்ற புஷ்பவனங்கள் சூழநெருங்கியுள்ளன. தவஞ்செய்வதற்குப் புநிதமான அநேக வனங்கள் சூழப்பட்டுள்ளன. தியானயோக சமாதியைவிட்டு நீங்காத பெரியோர்கள் கயிலாசகிரியின் குகைகளில் வாசஞ்செய்கின்றார்கள். அரிச்சந்தனம், தேவதாரம், மந்தாரம், பாரிஜாதம் முதலாகிய புஷ்பங்களைச் சுவர்ணதாம்பாளங்களில் பக்த கோடிகள் எடுத்துப்போய்த் திருவணுக்கன் திருவாயிலில் முதற்கோபுரவாசற்படியில் சிவசின்னங்களோடு சிவத்தியானபரராய் வீற்றிருக்கின்ற திருநந்திதேவரை நமஸ்கரித்து அநுமதிபெற்று உள்ளேபோய்ப் பரமசிவனைப் பூஜைசெய்வார்கள். வேதங்கள் புருஷவடிவங்கொண்டு தோத்திரஞ்செய்வன. தேஜோராசிகளை விரிக்கும் சாதரங்கம், குருவிந்தம் முதலாகிய இரத்தினங்களினாலிழைக்கப்பட்டுக் கிரணசோபைகளைப் பரப்பிக்கொண்டிருக்கிற சிம்மாசனத்தின்மேல் ஈசானம் தற்புருஷம், அகோரம், வாமதேவம், சத்தியோஜாதம் எனனும் ஐந்துதிருமுகங்களும், சந்திரசடாமகுடமும், ஒவ்வொரு முகத்துக்குச்சோமசூரியாக்கினியென்னும் திரிநேத்திரங்களும், பார்வதிதேவியார் வீற்றிருக்கின்ற வாமபாகமுமாகச் சிவபெருமான் எழுந்தருளியிருக்கின்றார். தரிசிக்கவருபவர்களுக்குக்

கற்பகவிருக்ஷங்கள். அதிமதுரமானகனிகளையும். பீதாம்பரங்களையும், திவ்ய ப்ரகாசபூஷணங்களையும் கொடுக்கின்றன. பவளம்போல் ஜொலிக்கின்ற திருமேனியுள்ளசிவகணநாதர்களும். வெண்மைநிறத்தால் விளங்கும்பூதகணங்களும். நீலரத்நகாந்தியுள்ள முனிவர்கூட்டங்களும். நெருங்கியிருப்பதால் அத்திருக்கயிலாசமலைமென்மேலும் ஒளிவீசுகின்றது. வேதாத்தியானஞ்செய்யும் ஓசையும், ஆகமபடனஞ்செய்யும் ஒலியும் சிவபுராண பாராயணஞ்செய்யும் கோஷமும், சிவநாமோச்சாரண ஆரவாரமும், அத்திருமலையில் எப்போதும் உள்ளனவாம். பக்தி செய்பவர்களுக்கு வேண்டியவரப்பிரசாதங்களைக் கடாக்ஷிக்கொண்டு அருட்சத்தியாகிய பார்வதி தேவியாருடன் பரமசிவம் சர்வகாலமும் எழுந்தருளியிருக்கின்றார்.

திருக்கயிலாயச்சருக்க முற்றிற்று.

## ௨ - வது காருடச் சருக்கம்.

திருக்கயிலாயத்தில் எழுந்தருளியிருக்கின்ற சிவபிரானை வணங்குநிமித்தம் விஷ்ணுதேவர் கருடவாகனமீது ஆரோகணித்துத்திருக்கயிலாயச்சாரலில் இறங்கி முதற்கோபுரவாயலில் கருடபகவானை நிறுத்தித் திருநந்திதேவர் அநுமதிபெற்று உள்ளேபோய் ஸ்ரீ கயிலாயபதியைத் தரிசித்தனர். முதற்கோபுர வாயிலிருந்த கருடன் வழக்கப்படி திருநந்திதேவரைப் பணியாமல் அலங்கரித்திருப்பதை நந்தியம் பெருமானறிந்து கருடதேவரைப்பார்க்க, இரந்துண்பவன் வாகனமான உன்கோபம் யாதுசெய்யுமென்று கருடபகவான் கூற, இச்சிவநிந்தையைக்கேட்ட நந்தியெம்பெருமான் பெருங்கோபங்கொண்டனர். புவனங்களியாவும் அதிர்ந்தன. இனி யென்னவிளையுமோவென்று தேவர்நடுங்கினார்கள். சிவநிந்தனையால் கருடன் யாதனை தேகத்தோடு பெருந்துயருறுமல், இப்போதே தண்டிக்கவேணுமென்று நந்திதேவர் நினைந்து பெருமூச்சுவிட்டனர். நாசிவழியாய்வந்த சுவாசமாகிய பிரசண்ட மாருதமானது கருடதேவரை நூறு யோசனைதூரம் உருட்டிக்கொண்டுபோனது. உள்ளேவாங்கும் சுவாசத்தால் நந்திதேவர் நாசிவரையில் உருண்டுருண்டு சரீரம் நறுங்கிப் பெருந்துயரடைந்து மகாவிஷ்ணுவைக் குறித்து கருடன் முறையிட்டனன். விஷ்ணுபெருமானறிந்து கருடனை உபாதிசெய்யாமல் விடும்படிச் சிவபிரானுடைய அநுமதி பெற்று



வந்து நந்திதேவருக்குத் தெரிவித்தனர். சிவநிந்தைசெய்த இத்தேகத்தை வைக்கலாதென்று கருடன்மீது மறுபடியும் கோபிக்க விஷ்ணுதேவர் சிவசந்நிதியடைந்து கருடனை உபாதிசெய்கின்றனரென்று சொல்லச் சிவபெருமான் நந்திதேவரை வரவழைத்து நமது கட்டளைக்கு மேலுங் கோபங்கொள்ளலாமோவென்று திருவாய்மலர, சிவவாக்கியத்தை ஆலோசியாமல் தனக்குக் கோபம் வந்ததைத் திருநந்திதேவர் நினைந்து சரீரம் நடுங்கி, அடியேன் தேவரீர் வாக்கியத்தைத்தடுத்த அபசாரத்தை மன்னித்தருளவேண்டுமென்று பிரார்த்தித்தனர். பின்பு கருடதேவர் சிவாநுக்கிரகத்தால் சரீரசௌக்கியமடைந்தனர்.

காருடச்சருக்க முற்றியது.

## ௩ - வது வேதகிரிச் சருக்கம்.

நைமிசாரண்யவாசிகளே கேட்பீகளென்று சூதமாமுனிவர் சொல்லத்தொடங்கினர். சிவவாக்கியத்தைத் தடுத்த நந்திதேவர் பணிந்து, அப்பாபம் நீங்க அநுக்கிரகஞ் செய்யவேண்டுமென்று பிரார்த்திக்கச் சிவபிரான் திருவுளமிரங்கி வேதகிரியென்று ஓர்ஸ்தலமிருக்கின்றது. பூர்வம் வேதங்கள் நம்மைப் பூஜித்து ஆறு அங்கங்களுடன் ஒன்று சேர்ந்து நமது திருவடியின்கீழ் நிலைத்திருக்கவேண்டுமென்று பிரார்த்திக்கப் பூலோகத்தில் ஒரு கிரிவடிவமாக நிற்பீர்களானல், அம்மலையினுச்சியில் நாம் சிவலிங்கவடிவமாகத் திருவுருக்கொள்வோம, அதனால் உங்களுக்கு வேதகிரி யென்று பெயருண்டாகுமென்று கட்டளையிட்டோம். அவ்வண்ணமே இருக்குவேதம் வேராகவும், யசுர்வேதம் மத்தியாகவும், சாமவேதம் அடியாகவும், அதர்வணவேதம் சிகரமாகவும், சந்தையென்பது பொன், வெள்ளி, இரும்பு, செம்பு, ஈயம், வெண்கலம், தாரவென்னும், தாதுக்களாகவும், கற்பம் அம்மலைக் குகைகளாகவும், மீமாம்சை வாழ்வரையாகவும், உபநிடதம் விருக்ஷங்களாகவும், நிருத்தம் அருவிகளாகவும், சோதிடம் மணிகளாகவும், சிவாகமம் நாற்புறத்திலுமுள்ள சாரல்களாகவும் விளங்குவனவாம் ஸ்தலங்களுக்குள் அது விசேஷமாகும், என்று நந்திதேவருக்குச் சிவபிரான் திருவாய்மலர்ந்தருளினர்.

வேதகிரிச்சருக்க முற்றியது.

## ௪ - வது ருத்திரகோடிச் சருக்கம்.

இவ்வாறு கட்டளையிட்ட பரமசிவத்தை நந்தியெம்பெருமான் வணங்கி, வேதகிரித்தலத்தில் கோடிருத்திரர்கள் பூஜைசெய்த காரணத்தையும் அடியேனுக்குத் திருவாய்மலர்ந்தருள வேண்டுமென்று பணிந்து கேட்கப் பரமசிவம் கட்டளையிடுகின்றார். பூர்வம் உலகத்தினிடத்து அனேக இராக்ஷதர்கள் பரவித் துன்பஞ்செய்துகொண்டிருந்தார்கள். அவர்களை நாசப்படுத்தும்படி நமது திருமேனியில் கோடிருத்திரர்களை உண்டாக்கினோம் அவர்கள் நமக்கு சமானமான வல்லமையுடையவர்கள். அவுணர்களை நாசஞ்செய்து உலகங்களுக்கு க்ஷேமத்தை உண்டுபண்ணுவீர்களென்று தெரிவித்தோம். அசுரர்களைக்கொன்று உலகங்களுக்கு க்ஷேமம் உண்டுபண்ணி அக்கோடிருத்திரர்களும் பின்பு கயிலாயத்தையடைந்து தவஸ்செய்துகொண்டிருந்தனர். அக்காலத்தில் விஷ்ணுதேவர் திருப்பாற்கடல் கடைய மத்தாக மந்தரகிரி எடுத்த பாதாளவழியாக அனேக ராக்ஷதக்கூட்டங்கள் வெளிப்பட்டு உலகங்களில் பரவினதைக்கண்ட தேவர்களும், முனிவர்களும் பயந்து கயிலைக்குவந்து முறையிட்டார்கள். அப்போது நாம் முன்பு உண்டாக்கின கோடிருத்திரர்களைப் பார்த்து அசுரர்களால் நேரிடும் துன்பத்தை நிவர்த்தி செய்யுங்களென்று கட்டளையிட்டோம். அக்கோடி ருத்திரர்களும் பணிந்து சுவாமி! இப்போது அவர்கள் பாபகிர்த்தியங்களைச் செய்தாலும், பூர்வம் விசேஷ புண்ணியங்களைச்செய்து தவம்புரிந்தவர்களாதலால், அவர்களைக் கொல்லும் பாபம் தொடராதபடி அனுக்கிரகஞ் செய்யவேணுமென்று கேட்டார்கள். வேதகிரி தலத்தில் நம்மை நீங்கள் பூசித்தால் பாபம் நிவர்த்தியென்று கட்டளையிட்டோம். இராக்ஷதர்களைத் துவம்ஸஞ்செய்து வேதகிரிதலத்தையடைந்து பணிந்தார்கள், அவர்களுடைய அன்பிற்குவந்து நாம் கோடிலிங்கமாக உருக்கொண்டோம். அவ்லிங்கங்களை அவர்கள் அர்ச்சனை செய்தபோது நாம் பிரசன்னமாய் நீங்கள் விரும்பியது யாதென்றுவினவ, இன்று முதலாக இத்தலம் ருத்திரகோடிதலமென்றும், தேவரீருக்கு ருத்திரகோடிநாதரென்றும் பெயர் வழங்கவேண்டுமென்று, கேட்டுக்கொண்டபடி அனுக்கிரகித்து அவர்களை நமது திருமேனியில் ஐக்கியஞ்செய்துகொண்டோம். அதுமுதல் அத்தலம் ருத்திரகோடியென்றும் வழங்குகிறதென்று நந்திதேவருக்குச் சிவபெருமான் திருவாய் மலர்ந்தனர்.

ருத்திரகோடிச்சருக்க முற்றியது.



## ரு - வது நந்திதவச் சருக்கம்.

சூதமாமுனிவர் சொல்லத்தொடங்கினார். நந்தியெம்பெருமான் சிவபெருமானிடம் அநுமதிபெற்றுக்கொண்டு வேதகிரிதலத்தின் சிகரத்தைக்கண்டு மனங்கசிந்துருகி சிரம், வலது அஸ்தம், இடது அஸ்தம், வலதுகன்னம், இடதுகன்னம், முகவாய், வலது புஜம், இடதுபுஜம் என்னும் அஷ்டாங்கங்களும் பூமியிற்படிய நமஸ்கரித்து வேதகிரியைச்சேர்ந்த மேற்குதிசையில் வேதகிரியின் சாயல்தோற்றும் ஒரு தீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்து பூசித்து இடைபின்கலையாகிய இரண்டுவழியையடைத்து சுழிமுனைநாடி வழியைத்திறந்து அவ்விடத்திற்காணப்படும் கோடிசூர்யப் பிரகாசத்தையும் தரிசித்துத் தசவிதநாத வொலிகளைக்கேட்டு, லலாடஸ்தானத்தில் சந்திரமண்டலத்திலிருந்து பெருகுகின்ற அமிர்தத்தைப் பானஞ்செய்து பிரம்மாநந்த பரராய் சிவயோகத்தில் எழுந்தருளியிருந்தனர். இவ்விதமாக நெடுங்காலந் தவஞ்செய்த நந்திதேவர் வைராக்கியத்தை வெளிப்படுத்தும்படி சிவபெருமான் தேவேந்திரனுக்குக் கட்டளையிட, இந்திரன் திலோத்தமை முதலிய தேவகணிகையர்களைத் தவஞ்செய்யும் நந்தி தேவரிடம் அனுப்பினான். அத்தேவதாசிகள் வேதகிரி தலத்திற்சேர்ந்து இடபரூபங்கொண்ட திருநந்திதேவரைக்கண்டு அதிசவுந்தரிய விசித்திர திருவுருவைப்பார்த்துப் பெருங்காமங்கொண்டு, கிடாரிவடிவமெடுத்தார்கள். நந்திதேவரைக்கண்டு அதிசவுந்தரிய விசித்திர திருவுருவைப் பார்த்துப் பெருங்காமங்கொண்டு, கிடாரிவடிவமெடுத்தார்கள். நந்திதேவருடைய தேகத்தைத் தனது உடம்போடு உராய்ந்து காமசங்கல்பம் உண்டாகும்படி திலோத்தமைசெய்ய, யோகத்தில் நின்றும் பிரிந்து பெருங்கோபத்தை அடக்கிக் கண்விழித்துப்பார்த்து, திலோத்தமையே! உனக்கு இந்தக்கிடாரிவடிவம் நிலைபெறக்கடவதென்று சாபங்கொடுத்தனர். திலோத்தமை நடு நடுங்கி சுவாமீ அடியேன்செய்த அபராதத்தை மன்னித்தருளவேண்டும், என்று கதறி அழுது திருவடியில் வீழ்ந்தாள். நந்திதேவர் மனமிரங்கி கலியுகத்தில் மகாபலிபுரமென்னும் நகரத்திலிருந்து சுரகுருவென்னும் சூரியவமிசத்தரசன் வனத்தில் வேட்டையாடும்போது, மாயீகன் என்னும் பன்றியின்மேல் விடும் பாணசேஷமானது உன்மேற்படும், நீ இறந்து திவ்ய சரீரத்தோடு சுவர்க்கமடையக் கடவாயென்று திருவாய் மலர்ந்து யோகத்திருந்தனர். திலோத்தமை சாபமடைந்ததைக்

கண்ட தேவமாதர்கள் பயந்து சுவர்க்கம்போய்விட்டனர். பின்பு திலோர்த்தமை பசுவடிவத்தோடு வனத்தில் மேய்ந்து அலைந்து திரிந்தனள். சிவபெருமான் திருநந்திதேவருக்கு அநுக்கிரகஞ் செய்யும்பொருட்டு நந்திதேவர்முன் ஆகாச வீதியில் எழுந்தருளியதைக்கண்ட தேவர்கள் கற்பகப்பூமாரி பெய்தார்கள், நந்திதேவர் கண்விழித்துப்பணிந்து தோத்திரஞ்செய்து ஆநந்தக்கூத்தாடினர். சிவபெருமான் உனக்கு வேண்டியவரம் கேளென்று திருவாய்மலர, எவராவது இத்தலத்தில்வந்து தேவரீரை பூஜித்தால் அவர்கள் திருக்கயிலாயபதம் அடையும்படிக்கும், இத்தலத்திற்கு நந்திபுரியென்றும், தேவரீரெழுந்தருளிய வேகிரிக்கு நந்திகிரியென்றும், நான் ஸ்நானஞ்செய்த தீர்த்தத்திற்கு நந்திதீர்த்தமென்றும், திருநாமம் வழங்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டபடி அநுக்கிரகித்தனர். இடபரூபங்கொண்ட நந்தியம்பெருமான் சிவபிரானைத் தாங்கிக்கொண்டு வேதகிரிக்கெழுந்தருளினார்.

நந்திதலச்சருக்க முற்றியது.

## ௬ - வது மாயீகச் சருக்கம்.

சூதமாமுனிவர் தெரிவிக்கின்றார். மாயீகனென்னும் ராக்ஷதனொருவன் கொடியபாவங்களைச் செய்துகொண்டிருப்பவன. ஒருநாள் வேதகிரிதலத்தின் வனத்தில் ஓர் பன்றியைக்கண்டு தானும் பன்றிரூபமெடுத்து, அந்தப்பன்றியைக் கொலைசெய்து தின்னும் நிமித்தப் போகும்போது, இவ்வசுரன் முன்செய்த புண்ணியபலனால் மார்க்கண்டேயர் சந்தித்து, இவ்வசுரனைப்பார்த்து மனதிரங்கி மாயீகா இத்தலத்தில் உன் மனம் கொலை செய்யத் துணிந்தல்லவா என்று கட்டளையிட்டதைக்கேட்ட இராக்ஷதன்பயந்து நமஸ்கரித்து நின்று சுவாமீ நான் நற்கதியடைய அனுக்கிரகிக்கவேணுமென்று வருந்திக்கேட்டனன். இப்பன்றிருவத்தோடு நீ இத்தலத்திலேயே வாசஞ்செய்வாயானால், சுரகுருமகாராஜா இவ்வனவேட்டையாடும்போது, அவர்பாணம் உன்மேற்பட்டுத் திவ்யசரீரம் உண்டாகும், பிறகு நீ கதியடைவாயென்று அநுக்கிரகித்து மறைந்தருளினர். பின்பு ராக்ஷதன் பன்றி உருவத்துடன் வனத்தில் யஞ்சாரஞ்செய்துகொண்டிருந்து சுரகுருராஜன் பாணத்தால் பன்றிவடிவம் பிளவுபட்டுத் தலத்தில்வசித்த புண்ணியத்தால் திவ்யசரீரம்பெற்றுச் சுவர்க்கமடைந்தனன்.

மாயீகச்சருக்க முற்றியது.



## ௭ - வது காமதேனுச்சருக்கம்.

சூதமாமுனிவர் சவுனகாதி முனிவர்களைப்பார்த்துச் சொல்லத்தொடங்கினார். வசிஷ்டமுனிவரால் ஆதரிக்கப்படும் காமதேனுவானது மகம்மேருவின் சாரலில் கற்பகவிருக்ஷநிழலில் வந்து தங்கியது. அஷ்டவசுக்களில் பிரபாசன் என்னும் எட்டாவது வசுவின் பத்தினியாகிய மாலினியென்பவள் (பேதமை என்பது மாதர்க்கணிகலம்) என்னும் வாக்கியத்திற்குச்சாக்ஷியுமாக தன்னாயகனைப்பார்த்து அப்பசுவின் பாலைக்கறந்து தாதாவென்று கேட்டாள். நாயகன் பசுவின்மகுத்துவத்தை யோசியாமல் அதற்கு வருத்தமுண்டாகும்படி பால்கரந்தான். பசுவானது பிரபாசனைப்பார்த்து நான் துன்பப்படும்படி நீ பால்கரந்தபடியாலும் நீ கரக்கவந்தை மற்ற எழுவசுக்களும், தடுக்காதபடியாலும், ஆகிய எண்மரும் காசிச்சுடலையில் பிணத்தைத் தின்னக் கடவீர்களென்று சபித்தது. அதைக்கேட்ட வசுக்கள்நடுங்கி காமதேனுவின் பாதத்தில் வீழ்ந்து முறையிட்டனர். காமதேனு இரக்கங்கொண்டு சில நீதிகளைத் தெரிவித்து நீங்கள் காசிப்பதியில் சுடலையிலிருந்து துன்பமடையும்போது, நாரதமுனிவருடைய அநுக்கிரகத்தால் க்ஷேமமடைவீர்களென்று சொல்லியது.

காமதேனுச்சருக்க முற்றியது.

## ௮ - வது நாரதச் சருக்கம்.

காமதேனுவினால் சபிக்கப்பட்ட அனலன், அனிலன், ஆபச்சைவன், சோமன், தரன், துருவன், பிரத்தியூசன், பிரபாசன், என்னும் எண்வரும் பூமிக்குவந்து காசித்தலத்தில் சுடலையில் அறிவிழந்து ஒளிமாறி, நிணமுள்ள பிணக்குவைகளைப் பிடுங்கித்தின்று நூறுவருஷகாலம் கழித்தார்கள். காசிக்குவந்த நாரதமகாமுனிவரைக்கண்டு வணங்கித் தங்களுக்குநேர்ந்த ஆபத்தை முறையிட அம்முனிவர் திருவுளமிரங்கித் தமது கையிலிருந்த கமண்டலதீர்த்தத்தை வசுக்கள்மீது புரோக்ஷித்தனர். முன்போற் சரீரகாந்தி யடைந்து அறிவு விளங்கிச் சுவாமீ தேவரீர் கிருபையினாலே பெருங்கவலை நீங்கினோம். பிணங்களையுண்டதோஷம் பரிகாரமாகத் தக்கமார்க்கத்தைக் கட்டளையிடவேண்டுமென்று விண்ணப்பிக்க, நாரதமுனிவர் அவர்களை வேதகிரித்தலத்துக்கு அழைத்துவந்து மார்க்கண்டேய

முனிவரைத் தரிசித்து இவர்கள் தாபத்தை நிவர்த்திக்கும்படி அம்முனிவரைப் பிரார்த்தித்து, அஷ்டவசுக்களையும் அவரிடம்விட்டு நாரதமுனிவர் தனதிருப்பிடஞ் சேர்ந்தனர்.

நாரதச்சருக்க முற்றியது.

## ௯ - வது இந்திரச் சருக்கம்.

அஷ்டவசுக்களும் மார்க்கண்டேய முனிவரை வணங்கித் துன்பத்துடன் நின்றனர். அவர்கள் உள்ளக்குறிப்பை ஞானதிருஷ்டியினாலறிந்த முனிவர் விஷ்ணுமுதலிய தேவர்களுக்குந் துன்பம்வந்து தங்களிருப்பிடமும் வாழ்வும்போய் இத்தலத்தில் தபஞ்செய்து தங்களிட பதவியைச் சேர்ந்திருக்கின்றார்களென்று கட்டளையிட வசுக்கள் முனிவரைவணங்கி அவர்கள் யாதுகாரணத்தால் துன்புற்றார்களென்று கேட்க மார்க்கண்டேயர் திருவாய்மலர்ந்தருளுகிறார். இந்திரலோகத்திற்கடுத்த ஆகாயகங்கைக்கரையில் ஓர் தெய்வமாது அழுதுக்கொண்டிருந்ததை யறிந்த இந்திரன் நீ துயரப்படுங்காரணம் யாதென்று கேட்கக் கூறுகின்றாள். என் கையிலிருந்த பந்தைப் பலாத்காரமாய் பிடுங்கிக்கொண்டு ஓர் மனிதன் வெள்ளிமலைக்குப் போனானென்று சொல்லினாள். இந்திரன் அவள் துயரத்தை நிவர்த்திக்க எண்ணங்கொண்டு தேடிக்கொண்டு போகும்வழியில் பரமசிவம் மாறுவடிவங்கொண்டு தேவியுடன் பந்தைப் பக்கத்தில் வைத்துவிட்டு சூதாடிக்கொண்டிருந்தனர். தேவமாது சொன்ன அடையாளத்தை யொத்த பந்தைப்பார்த்து இந்திரன் கள்வனே பந்தைக்கொடுவென்று அதட்டிக்கேட்கச் சுவாமி கேளாதவர்போல் ஆட்டத்திலிருந்தனர். இந்திரன் கோபித்து அவரைத் தண்டிக்க வச்சிராயுதத்தை உயரத்தூக்கினான். கடவுள் பார்த்தமாத்திரத்தில் அசைவற்றுச் சித்திரம்போலிருந்தான். உடனே சிவபிரான் ஓர் தோழியை யழைத்துப் பாம்புகளால் இவனைக்கட்டி மலைக்குகையில் சிறைப்போடும்படி கட்டளையிட, அவ்வண்ணமே ஓர் தோழி சிறையிலிட்டனள். இந்திரன் சிறையிலிருந்து யாதுகாரியஞ் செய்தோமென்று துன்பக்கடலிலாழ்ந்தனன். தேவர்கள் யாவரும் தமது அரசனைக் காணாமையால் வருந்தி ஆசாரியராகிய பிரகஸ்பதி பகவானுக்கு விண்ணப்பித்துத் தமது குருவுடன் திருக்கயிலாசத்துக்குப் போனார்கள். அவ்விடம்வந்த நாரதமுனிவரால் இந்திரன் சிறையிலிருப்பதையறிந்து இந்திரனுக்கு நேரிட்ட சிவாபராதம் எவ்வாறு நீங்குமென்று தேவர்கள் கேழ்க்கப் பிரகஸ்பதிபகவான் பல சிவாப



ராதங்களைத் தெரிவித்துக் கைலாயத்துக்குத் தேவர்களோடுபோய்ச் சிவபிரானை வணங்கிச் சுவாமீ இந்திரன் தப்பிதத்தை மன்னித்தருள வேண்டுமென்று விண்ணப்பித்தனர். சிவபெருமான் இந்திரனைச் சிறைவிடுவித்து இந்திரனே வேதகிரித் தலத்திற்குப்போய் நம்மைப் பூசிப்பையாகில் இஷ்டசித்தி பெறுவாயென்று கட்டளையிட்டனர். அவ்வாறே வேதகிரித்தலத்தையடைந்து கிரிக்குக் கிழக்கே தம்பெயரால் ஒரு தீர்த்தத்தை யுண்டாக்கி ஸ்நானஞ்செய்து பூசித்து இஷ்டசித்திகளைப்பெற்று இந்திரலோகஞ்சேர்ந்தான்.

இந்திரச்சருக்க முற்றியது.

## ௰ - வது நாராயணச் சருக்கம்.

மார்க்கண்டேய முனிவர் அஷ்டவசுக்களுக்குத் திருவாய்மலர்கின்றனர். விஷ்ணுதேவர் தேவர்களுக்குத் துன்பம் உண்டுபண்ணின அசுரர்களை வதைக்கும்போது, சில இராக்ஷதர்கள் காட்டில் ஓடி அங்குள்ள பிருகுமகாமுனிவருடைய பத்தினியைக்கண்டு சரணாகதஞ்செய்தார்கள். அவர்களை தம்முடைய ஆசிரமத்தில் தங்கச்செய்து தான் வாயிலில் நின்றுக்கொண்டிருந்தனள். விஷ்ணுதேவர் ரிஷிபத்தினியைக் கண்டு அவுணர்களை கொலைசெய்வதற்கு வழிவிடடென்று கூறினர். என்னை அவர்கள் சரணாகதி யடைந்தபடியால் வழிவிடேனென்றனள். விஷ்ணுதேவர் கோபித்து ரிஷிபத்தினிமீது சக்கராயுதத்தைப் பிரயோகித்தபோது ஆசிரமத்தோடு பெருவனம் பற்றிக்கொண்டதுமல்லாமல் இராக்ஷதர்களும் பிருகுபத்தினியுஞ் சாம்பலாயினர். பிருகு முனிவர்வந்து நடந்த செய்தியறிந்து காலருத்திரனைப்போல் கோபங்கொண்டு, விஷ்ணுதேவரைப் பார்த்துச் சரணாகதரக்ஷணைசெய்த என் மனைவியைக் கொன்றீராதலால் உமக்கு நேரிடும் பத்து அவதாரங்களில், இராமாவதாரத்தில் பத்தினியைப் பிரிந்து துன்பமடைவீரென்று சபித்தனர். திருமாலானவர் எனக்கு இப்பெண்பழி நேரிட்டது பூர்வ வினைப்பயனென்று வருந்திக் கால் பெருவிரலால் பூமியை ஊன்றினர். அங்குதோன்றிய பாதாள கங்கையைத் திருக்கரத்தால் எடுத்து அம்முனிவர் பத்தினியின் எலும்பின்மேல் புரோக்ஷிக்கத் திவ்ய மங்கள ரூபத்தோடு எழுந்த பத்தினியைக்கண்டு பிருகு முனிவர் சந்தோஷித்து மகாவிஷ்ணுவே உம்முடைய லீலாவிபவத்தை யாவரறியப்போகின்றார்கள். நாம் கொடுத்தசாபம் அந்நாளில் தேவர்களுக்கு உதவியாய் இராவணாதிகளைக்கொன்று சீதாதேவியை மீட்டுவந்து வாழ்வதற்கு

அநுகூலமாகும். ஸ்திரீஹத்தி நீங்கும்பொருட்டு தேவகிரிக்குப் போய்த் தவஞ்செய்வீரென்றனர். அவ்வாறே விஷ்ணுதேவர் வேதகிரிக்குவந்து விதிப்படி பூசித்தனர். வேதகிரிநாதர் பிரசன்னராய்க் காக்ஷிகொடுத்தருள விஷ்ணுதேவர் மகிழ்ந்து தேவரீர் திருமூர்த்தி சொரூபமானபோது என்னை யிடப்பாகத்திற் காட்டியருளினீர், என்று துதிசெய்து வேண்டிய வரம் பெற்று வைகுந்தத்துக் கெழுந்தருளினர். வேதகிரிக்குத் திருநாரணபுரி யென்றும் பெயர் வழங்குகின்றது.

நாராயணச்சருக்க முற்றியது.

## ௰௧ - வது சதுமுகச் சருக்கம்.

அஷ்டவசுக்களைப்பார்த்து மார்க்கண்டேய முனிவர் திருவாய் மலர்கின்றனர். பிரம்மானவர் சாவித்திரி, பாரதி யென்னும் மனைவியாரிருவரில், சாவித்திரி யென்பவளிடத்தில் வெறுப்பும் பாரதி யென்பவளிடத்து விருப்பமுள்ளவரானார். அதையறிந்த சாவித்திரியானவள் கோபங்கொண்டு பிரம்மதேவரைப்பார்த்து வேதங்கள் உம்மைவிட்டு நீங்கக்கடவனவென்று சபித்துச் சப்தமுனிவர்கள் தங்கும் ஆசிரமஞ்சேர்ந்து தவஞ்செய்துகொண்டிருந்தனள். சாபமொழிப்படி பிர்ம்மதேவர் வேதங்கள் தம்மைவிட்டுப் பிரிந்ததால் அறிவிழந்து, மதுகைடவரால் சண்டையில்தோற்று விஷ்ணுதேவரிடஞ்சென்று முறையிட்டனர். விஷ்ணுதேவர் மதுகைடவரைச் சங்கரித்துப் பிரமதேவரைப்பார்த்து நீ வேதகிரித்தலத்தை யடைந்து பூஜித்தால் இஷ்டசித்தி பெறுவாயென்று கட்டளையிட்டனர். பிர்ம்மதேவர் வேதகிரித்தலத்தைச் சேர்ந்து விதிப்படி பூஜித்ததனால் சிவபெருமான் பிரசன்னராய்க் காக்ஷிகொடுக்க, வேதங்களையும் சாவித்திரியையும் அடைந்து ஸத்தியலோகம் சேர்ந்தனர்.

சதுமுகச்சருக்க முற்றியது.

## ௰௨ - வது வாசுதேவச் சருக்கம்.

விபூதி ருத்திராக்ஷமணிந்து சிவபூஜையை விதிவழுவாமற் செய்தவர் முத்தியடைவரென்று மார்க்கண்டேயமுனிவர் அஷ்டவசுக்களுக்குச் சொல்லத்தொடங்கினர். விபூதியானது கற்பம், அநுகற்பம், உபகற்பம் என மூன்றுவகைப்படும். இவைகளில் கற்ப



விபூதிக்குரிய இலக்கணம் அவயப் பழுதானபசு, கன்னிப்பசு, கன்றுபோட்டநாள் சமீபித்தபசு, மலட்டுப்பசு, கிழப்பசு, கன்றிறந்தபசு, இவைகள் ஆகாவாம். அழகுவாய்ந்த கன்றையுடைய பசுவாயிருக்கவேணும் அப்பசுசம்பத்தால் மேய்ந்திருந்தால் உத்தமம். அதன் சாணத்தை அஷ்டமி, சதுர்த்தசி, பூரணை இந்தத்திதிகளில் கீழ்விழுவதற்குமுன் பரிசுத்தத்தோடு எடுத்துவந்து மேல்விழும்பிணைநீக்கிப் பஞ்சகவ்வியம்வார்த்துப் பிசைந்து, பதறில் உருட்டி அக்கினியில் தகித்துப் பதத்தில் எடுத்துப் புதுப்பாண்டத்தில் வைப்பது கற்பகவிபூதியாகும். சித்திரைமாதத்தில் வனத்தில் உலர்ந்திருக்கும் சாணத்தை யெடுத்துவந்து உரலில் யிடித்துக்கோஜலம்வார்த்துப் பிசைந்து பதறில் உருட்டி அக்கினியில் தகித்துப் புநிதமாக எடுத்துவைப்பதே அநுகற்ப விபூதியாகும். பெருவனம் இயற்கையாகப் பற்றிக்கொண்டதில் நேரிட்ட சாம்பற்பொடியை எடுத்துவந்து பால், தயிர், நெய், கோஜலம், கோமயம், என்னும் பஞ்சகவ்வியம்விட்டுப் பிசைந்து அக்கினியில் தகித்துப் புநிதமாக எடுத்துவைப்பதே உபகற்பகவிபூதியாம். இவ்வாறு உண்டுபண்ணும் விபூதி நீலநிறமாயிருக்கில் வியாதியும், கருமைமிகுந்து சிவந்திருக்குமாகில் ஆயுள் குறைவும், செம்மைநிறமாகில் புகழ் நீங்குதலும், மஞ்சள் நிறமாகில் வறுமையும் உண்டாகும். வெண்மை நிறமானால் புண்ணியம் உண்டாகும். பட்டு, வஸ்திரம், பெண்மான்தோல், புலித்தோல், இவைகளில் எதையாவது விபூதிப்பையாகத் தைத்துக்கொள்ளலாம். விபூதிப்பை பன்னிரண்டங்குல நீளமும், எட்டங்குல அகலமுமாக இருக்கவேண்டும். விபூதிப்பை நேரிடாவிடில் சம்புடம், வாழைப்பட்டை, மான்றோல், வியாக்கிர சர்மம், வில்வக்குடுக்கை, சுரைக்குடுக்கை, இவைகளிலும் வைத்துக்கொள்ளலாம். விபூதிதரிக்கும் விதி விபூதி உத்தூளனஞ்செய்து காலையில் கிழக்குமுகமாகவும், மாலையில் வடக்குமுகமாகவும், ஆசாரியர் மூலமாய்த் தெரிந்தமந்திரங்களை யுச்சரித்துக்கொண்டு ஜலம்விட்டுக் கவசமந்திரந்தனை உச்சரித்துக்கொண்டு ஜலம்விட்டுக் கவசமந்திரத்தால் குழைத்துச் சிரசு, நெற்றி, மார்பு, நாபி, வலதுமுழந்தாள், இடதுமுழந்தாள், வலதுபுஜம் இடதுபுஜம், வலதுமுழங்கை, இடதுமுழங்கை, கணுக்கை இரண்டு, விலாப்புறம் இரண்டு, முதுகு, கழுத்து ஆகிய பதினைந்திடங்களிலும், தரித்துக்கொள்ளவேண்டும். இவைகளில் விலாப்புறம் நீக்கிக் காதுகளைக் கொள்வதுமுண்டு. முழங்கைகளையும் மணிக்கட்டுகளையும் நீக்கிப் பன்னிரெண்டு ஸ்தானங்கொள்

வதுமுண்டு. அப்படித்தரிக்கும் விபூதியின் அளவு நெற்றியில் கடைப்புருவமளவும், மார்பு, புயங்களில் அவ்வாறங்குல நீளமும், மற்ற ஸ்தானங்களில் ஒவ்வோரங்குல நீளமுமிருக்கவேண்டும். ஒன்றுடன் ஒன்று சேரலாகாது. எந்தச் சத்கர்மங்களை ஆரம்பித்தாலும் விபூதிதரித்துப்பின்பு, ஆரம்பிக்கவேணும். சுவாமி சந்நிதியிலும், யாகசாலையிலும், ஆசாரியர் முன்னிலும் நேரில் தரிக்காமல் வேறு திக்குமுகமாகத் தரிக்கவேண்டும். விபூதி உயிர்க்குற்றங்களை நீறுக்குதலால் திருநீறென்றும், சம்மத்தைக்கொடுத்தலால் பூதியென்றும், ஆகமங்களில் சொல்லப்படும்.

## உருத்திராக்ஷ விதி.

உருத்திராக்ஷநிறம் வெண்மை பிரமகுலமென்றும், செம்மை க்ஷத்திரியகுலமென்றும், பொன்னிறம் வைசியகுலமென்றும், கருமை சூத்திரகுலமென்றும் சொல்லப்படும். உருத்திராக்ஷபேதங்கள் ஒரு முகம் முதலாகப் பதினாறுமுகம் வரையிலும உள்ளன. இவைகளில் முப்பத்திரண்டுமணி, மாலையாகத் தரித்துக்கொண்டாலும், அல்லது தனியே ஒருமணி தரித்தாலும், பாபம்நீங்கிப் புண்ணியம் பெறுவார்கள். இவைகள் சிவரூபமாதலால் சிவபெருமானாகவே பிரீதிபாராட்டவேண்டும். ஜெபமாலைக்கு மணி நூற்றெட்டு, ஐம்பத்துநாலு, இருபத்தேழு, இவைகள் ஒன்றுடன் ஒன்று சேராமல் முடிந்து மாலையாகவைத்து ஜெபிக்கவேண்டும். இஷ்டசித்தி விரும்பினோர் இருபத்தைந்து முப்பதுசேர்ந்த மாலைதரிப்பதுமுண்டு. ஜெபிப்பது சிவாலயத்திலாகில் விசேஷ புண்ணியமுண்டாம். காசி முதலிய க்ஷேத்திரங்களில் தேவர்களாலும் அவுணர்களாலும் பூஜிக்கப்பட்ட இலிங்கங்களில் பாணாசுரனால் பூசிக்கப்பட்ட இலிங்கங்களை வருணாச்சிரமத்துக் கேற்றவைகளாகக் கொண்டுவந்து மாலையாகத் தரித்து வெண்மைநிற விபூதியுந் தரித்து விதிப்படி பூஜிப்பாராயின் மோக்ஷம் அடைவாரென்பது சத்தியம். இவ்வாறு பல நீதிகளையும் தபோமார்க்கத்தையும் போதித்த மார்க்கண்டேயமுனிவரை வணங்கிப் பின்பு அஷ்டவசுக்களுந் தவஞ்செய்தனர். சிவபெருமான் எழுந்தருளி அநுக்கிரகிக்க இஷ்டசித்திகளைப் பெற்றுத் தங்கள் பதவியை யடைந்தார்கள். அதுமுதல் அத்தலம் வசுகணநாதபுரமென்றும் வழங்குகிறது.

வசுதேவச்சருக்க முற்றியது.



17
129965

## ௧௩ - வது தினகரச் சருக்கம்.

சூதமாமுனிவர் பன்னிரண்டு சூரியர் பூஜித்துவரம் பெற்றதைக் கட்டளை யிடுகின்றார். வைகர்த்தன், விவச்சுவான், மார்த்தாண்டன், பாஸ்கரன், இரவி, லோகப்பிரகாசன், சாக்ஷி, சுவிக்கிரமன், ஆதித்தன், சூரன், அஞ்சுமாலி, திவாகரன் என்னும் பன்னிரு சூரியரும் பிரகாசிப்பதில் நான் வல்லவன் நான் வல்லவனென்று ஒருவரோடு ஒருவர் விவாதப்பட்டு ஸத்தியலோகம் சேர்ந்து பிரம்மதேவரைப் பணிந்து தங்கள் விவாதத்தைச் சொல்லிக்கொள்ள நீங்கள் யாவரும் சமமான ஒளியுடையீர்கள். மாதத்துக்கு ஒவ்வொருவராக உதயகிரியில் பிரகாசிக்கவேண்டுமென்று தெரிவித்தனர். தங்களுக்குள் நேர்ந்த விவாதம் நீங்கி மாதம் ஒவ்வொருவர் பிரகாசித்தார்கள். பின்பு அசுரர்களால்மெலிந்து வேதகிரியை யடைந்து பூசித்து வேண்டியவரங்களைப்பெற்றுத் தங்கள் வாசஸ்தானத்தை அடைந்தனர்.

தினகரச்சருக்க முற்றியது.

## ௧௪ - வது முனிகணச் சருக்கம்.

சூதமாமுனிவர் தெரிவிக்கிறார் விராடபுருஷனுடைய இருதய கமலமாகிய சிதம்பரத்தில் சிற்சபாநாதரை ஆதிசேஷ பகவான் வணங்கித் தேவரீர் திருவாய்மலர்ந்தருளிய பாணினியமென்னும் வியாகரணத்தை உபதேசிக்கவேண்டுமென்று சௌநகாதி முனிவர் அடியேனைப் பிரார்த்திக்கின்றார்கள். அவர்களுக்கு உபதேசிக்கும்படி தேவரீர் அநுமதி தந்தருளவேண்டுமென்று கேட்டனர். நீ பதஞ்சலி முனி வடிவங்கொள்ளும் போது உபதேசிப்பாயென்று சிவபெருமான் திருவாய்மலர அவ்வண்ணமே பதஞ்சலிமுனி வடிவங்கொண்டு சிதம்பரத்தைச்சேர்ந்து அங்குத் தவஞ்செய்யும் வியாக்கிரபாத முனிவரோடு ஆனந்தத் தாண்டவத்தைத் தரிசித்து அங்கு வந்த முனிவர்களுக்கு வியாகரணம் போதித்தனர். சிவாகாரமாயிருந்து உபதேசியாமையால் அம்முனிவர்களுக்குப் பொருள் தெரியாது மயங்கிச் சபாநாதர் கட்டளைப்படிக்குத் திருக்கழுக்குன்றத்திற்குவந்து பூசித்து வியாகரணப் பொருளுணர்ந்து அத்தலத்தில் வாசஞ்செய்தனர்.

முனிகணச்சருக்க முற்றியது.

## ௧௫ - வது திருமணச் சருக்கம்.

பரசிவன் உலகமாதாவாகிய பார்வதிதேவியாரை ஆதிகாலத்தில் இமயமலையில் திருமணஞ்செய்துக்கொண்டதுமன்றி வேறோர் கற்பத்தில் வேதகிரித்தலத்தினின்றும் இமயமலைக்குப் போய்த்

திருக்கல்யாணஞ்செய்துகொண்டார். அதைக் கூறுகின்றேன் கேட்பீர்களென்று சொல்லத்தொடங்கினர். இமயபர்வதராஜனென்வன் கௌதமர், காசிபர், மார்க்கண்டேயர், பாரத்துவாசர், அகஸ்தியர், புலஸ்தியர், அங்கிரசர் என்னும் சப்தமுனிவர்களைப்பார்த்து என் குமாரத்தியாகிய பார்வதிதேவியாரை ஸ்ரீ வேதகிரிநாதருக்குக் கொடுக்கும்படி நிச்சயித்திருக்கின்றேன். நீங்கள் வேதகிரிக்குப்போய் என் சம்மதத்தைச் சுவாமி சந்நிதியில் விண்ணப்பித்து அநுமதி பெற்று வருவீர்களென்று பிரார்த்தித்தனன். ஏழுமுனிவர்களும் வேதகிரித் தலத்தைச்சேர்ந்து சிவபெருமானைப் பணிந்து மலையரசன் விருப்பத்தை விண்ணப்பஞ்செய்தார்கள். வேதகிரிநாதர் உலகங்கள் பிழைக்குநிமித்தம் அவர்கள் விண்ணப்பத்தை யேற்றுக்கொண்டு தேவர்களுடன் இமயமலைக்குப்போய்ப் பார்வதிதேவியாரைத் திருமணஞ்செய்து வேதகிரிக்கெழுந்தருளினர். சமஸ்ததேவர்களும் வேண்டியவரம் பெற்றுத் தங்கள் தங்கள் பதவியைச் சேர்ந்தார்கள்.

திருமணச்சருக்க முற்றியது.

## ௰௬-வது கங்காசலச் சருக்கம்.

இதற்குப்பொருள்.

சங்கம்—கழுகு, அசலம்—மலை கழுகுபூசிக்கு மலை. சான்மலி நாட்டில் கிரேதாயுகத்திலே விருத்தசிரவாவென்கிற மகாமுனிவருடைய நெற்றியில் சண்டனும், மார்பில் பிரசண்டனும்: என்கிற முனிவர்கள் இருவர் கழுகுவடிவாக அவதரித்தார்கள். அவர்களைப் பிதாபார்த்துச் சமஸ்தபக்ஷிகளுக்கும் அதிபதியாவீர்களென்றனர். அவர்களதை வெறுத்து வேதகிரிநாதரைப் பூசிக்கவேண்டிய விதிகளைதெரிந்து வேதகிரிக்கு வந்து பூசித்து அந்தயுகமுடிவில் சாயுச்சியத்தை யடைந்தார்கள்.

### சம்பாதிசடாயு பூசித்தவரலாறு.

இரண்டாவது திரேதாயுகத்தில் சம்பாதி சடாயு வென்னும் இரண்டு முனிவர்கள் பூர்வவினையால் கழுகுவடிவமாகப் பிறந்தார்கள். சம்பாதி யென்பவர் தம்பியாகிய சடாயுவைப்பார்த்து உன்னிலும் நானேவலிமையுடையேனென்றனர், தம்பி தமயனைப்பார்த்து உன்னிலும் நானே வலிமையுடையேனென்றார். இவ்வண்ணம் இருவரும் வாதித்துப் பின்பு நாம் இருவரும் சூரியமண்டலத்தை நோக்கிப் பறந்துசெல்வோம். யாவர்முன்னே சூர்யமண்டலத்தை யடைகின்றார்களோ அவர்களே பராக்கிரமத்தில் உயர்ந்தவர்களென்று தம்முள் நிச்சயித்து முனிகணங்களைச் சாக்ஷியாக வைத்துமேருபர்வத உன்னத சிகரத்திலிருந்து ஆகாயத்தைநோக்கி யிருவரும்



ஒரேகாலத்தில எழும்பிப் பறந்தார்கள். அதனால் அஞ்சுமுனிவர் சாபத்தையடைந்து வேதகிரி தலத்தைப் பூசித்து அந்தயுகமுடிவில் சாயுச்சியத்தை யடைந்தார்கள்.

### சம்புகுத்தன் மாகுத்தன் சரித்திரம்.

துவாபரயுகத்தில் சம்புகுத்தன் மாகுத்தன் என்னும் முனிவர்கள் வேதகிரியில் தவஞ்செய்தார்கள், தமயனாகிய சம்புகுத்தன் சிவமே பெரிதென்றான். தம்பியாகிய மாகுத்தன் சத்தியே பெரிதென்றான். சிவமே பெரிதென்பவனை சிவபெருமானும் சத்தியே பெரிதென்றவனைத் திரிபுராம்பிகையும் கழுகாகச் சாபங்கொடுக்க அத்தலத்தில் பூசித்து அந்த யுகமுடிவில் சாயுச்சியபதவியை அடைந்தனர்.

### பூடாவிருத்தா சரித்திரம்.

நாலாவது கலியுகாரம்பத்தில் பூடா விருத்தா என்னும்இரண்டு முனிவர்கள் வேதகிரிதலத்தில் தவஞ்செய்தனர். அத்தவத்திற்கு வேதகிரிப்பெருமான் இரங்கிக் காக்ஷிகொடுத்து நீங்கள் செய்யுந் தவத்துக்கு நாம் மகிழ்ந்தனம் சாரூபபதத்தை யிப்போது தருகின்றோம் ஒருகற்பமட்டும் அச்சரீரத்தோடு திருக்கயிலாசத்தில் வாசஞ்செய்வீர்கள். அதன்பின்பு சாயுச்சியத்தைப் பெருவீர்களென்று திருவாய்மலர்ந்தனர். அதைக்கேட்ட இரண்டு முனிவரும் இப்போதே சாயுச்சியம் தரவேண்டுமென்றனர். நாம் கட்டளையிட்ட வாக்கியத்தை மறுத்தமையினால் நீங்கள் கழுகுவடிவங்கொள்வீர்களென்றனர. முனிவர்கள்பயந்து அபராதத்தைப பொறுத்தருள வேண்டுமென்று பிரார்த்திக்க, நீங்கள் காசிபரிஷியினுடத்தில் இரண்டு கழுகுகளாகப் பிறந்து சம்பு ஆதி யெனனும் பெயர்பூண்டு இவ்வேதகிரிக்கு வந்து கிரியின்மீதுள்ள பாறையில் உங்கள் மூக்கினால் கீறுவீர்கள் அக்கிறல் சுனைவடிவமாகும். அத்தீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்து பூசைசெய்யுங்கள். கலியுகமுடிபுல் முக்தியடைவீர்களென்று திருவாய்மலர்ந்தனர். அப்படியே காசிபமுனிவரிடத்தில் கழுகுவடிவமாகப்பிறந்து சம்பு அதி யென்னும் பேர்பூண்டு இப்போதுந் தவச்செய்துக்கொண்டிருக்கிறார்கள். இவ்வண்ணம் யுகங்கள்தோறும் இரண்டிரண்டு போகளாக நான்குயுகத்திற்கும் கழுகு வடிவங்கொண்ட எட்டுமுனிவர்கள் பூசித்தகாரணத்தால் இம்மலைக்குக் கழுகாசலமென்றும் பெயர் வழங்குகின்றது.

கங்காசலச்சருக்க முற்றியது.

## ௰௭-வது பசுவராகச் சருக்கம்.

சூதமாமுனிவர் திருவாய்மலர்கின்றனர். மகாபலிபுரத்தில் சூருச்சக்ரவர்த்தியென்பவன் அரசாட்சி செய்துவந்தனன் கலியுகா

சென்னை-600 008

ரம்பத்தில் திருக்கழுக்குன்ற ஆரண்யத்தில் ஒரு பன்றியானது அனேகருக்குத் துன்பஞ்செய்துவந்தது. அதையரசன்கேட்டு காட்டிற்கு வந்து பன்றியைக் கொல்லும்படிவிட்ட பாணமானது அப்பன்றியைக்கொன்று பின்னும் வேகத்துடன்சென்று ஒரு புதருக்கு அப்பால் மேய்ந்த ஒருபசுவின்மீது பட்டு அதையும் ஊடுருவியது பசுவாயிருந்த திலோத்தமை அரசனைபுகழ்ந்து சுவர்க்கம்போய்விட்டாள். பன்றியாகிய மாயிக அசுரன் தவஞ்செய்யப்போயினர்.

பசுவராகச்சருக்க முற்றியது.

## ௰௮ - வது தீர்த்தச் சருக்கம்.

சூதமாமுனிவர் தீர்த்தமகிமையைச் சொல்லத்தொடங்கினர். வேட்டைநாய்களுக்குள் ஓர்நாய் குஷ்டரோய் கொண்டிருந்தது. அது வேதகிரியின்மேலேறி சுனையிலிருந்த தீர்த்தத்தைக் குடித்தபோது தவறிச் சுனைக்குள் வீழ்ந்தது. அத்தீர்த்தத்தின் மகிமையால் குஷ்டம்மாறிச் சுவர்ணகாந்தி யடைந்தது. குஷ்டமுள்ள மந்திரி அதைக்கண்டு அந்நாய் போனவழியே போய்ச் சுனையைப்பார்த்தபோது அத்தீர்த்தம் புழுக்களால் நிறைந்திருப்பதுப்போலத் தோன்றியது மனதில் அருவருத்து வாய்க்குள்ளே தீர்த்தம்போகாமல் ஸ்நானஞ்செய்தனன் சரீரமுழுதும் சுவர்ணகாந்தியாகிப் பிரகாசித்து, வாய்மட்டும் வெண்குஷ்டம் மாறாதிருந்தது. நான் தீர்த்தத்தை அருவருத்தேனாதலால் வாயில் குஷ்டம்நீங்கவில்லையென்று வாயால் தீர்த்தத்தைப் பருகினன். ஆதியில் சந்தேகித்தபடியால் வாயிலிருந்த வெண்குஷ்டம் மாறவில்லை. மந்திரி ஆச்சரியங்கொண்டு அரசனிடம்வந்து அந்த அற்புதத்தை தெரிவித்தனன். அம்மந்திரியை முத்துமணி வெள்வாயனென்று யாவரும் சொல்லினர்கள். பின்பு அரசன் மகாபலிபுரம் போகும்போது இப்போது கழுகுவடிவங்கொண்டு பூசிக்கும் முனிவர்கள் தடுத்து வேதகிரிஸ்தலத்தின் தீர்த்தமகிமையைத் தெரிவிக்கின்றார்கள். ஆதியில் கங்கை முதலிய நதிகளெல்லாம் சமுத்திரராஜனிடம் வந்தார்கள். வருணதேவன் கங்கையினிடத்தில் அதிகபிரியங்காட்டினன். மற்ற நதிதேவிகள் கண்டு ஊடல் கொண்டனர். கங்கை என்மகிமை உங்களுக்குக் கிடைக்குமோவென்று சொல்ல ஒருவருக்கொருவர் விரோதித்து வாதஞ்செய்வதை சமுத்திராஜன் பார்த்து அவர்களை யழைத்துக் கொண்டுபோய் கோதாவரி கோடீச்சுரருக்குத் தெரிவிக்க அக்கடவுள் அந்நதிதேவிகளுடன் உருத்திரகோடி ஸ்தலத்திற்குவந்து அங்குள்ள தீர்த்தங்களில் அவர்களை ஸ்நானஞ் செய்வித்தனர். ஸ்நானஞ் செய்தவுடன தாங்கள் கொண்ட பொறாமை நீங்கி வேண்டிய வரம் பெற்று வாசஸ்தானத்தை யடைந்தார்கள். வருணதேவனும் வேண்டியவரம்பெற்றுசென்றனர். இத்தலத்தில் அனேகதீர்த்தங்களுள்ளன.



அவைகளின் முக்கியம் பன்னிரண்டு தீர்த்தமாகும். திருமலைக்கு கிழக்கே மூவர்கோவில் சமீபம் இந்திர தீர்த்தம் அக்கினிமூலையில் ருத்திராங்கோவிலில் உள்ளது சம்பு தீர்த்தம், ருத்திரகோடி தீர்த்தம் வேதமலைக்குத்தெற்கு வசிஷ்டமுனுவராலே உண்டாக்கப்பட்டது சங்குதீர்த்தம், நிருதிமூலையில் மெய்ஞ்ஞான தீர்த்தம் அகஸ்திய தீர்த்தம். மார்க்கண்டேய தீர்த்தம் விஸ்வாமித்திர தீர்த்தம். திருமலைக்கு மேற்கில் நந்திதீர்த்தம் வருணதீர்த்தம் வடமேற்கில் அகலிகாதீர்த்தம், வேதகிரியின் பாறையின்மீது எங்கள் மூக்கினாலே உண்டாகப்பட்ட சுனை சம்பாதிதீர்த்தம் இந்த தீர்த்தங்களில் ஸ்நானஞ் செய்தவர்கள் பாபம்நீங்கிப் பரிசுத்தராவார்கள்.

தீர்த்தச்சருக்க முற்றியது.

## ௰௯ - வது தலவிசிட்டச் சருக்கம்.

இரண்டு கழுகு முனிவரும் சுரகுரு அரசனுக்குத் தெரிவிக்கின்றார்கள். இத்தலம் சிவபுரமென்னும் தக்ஷிண கயிலாசமென்றும் வழங்கும். ஆதியில் சிவபெருமான் திருநந்திதேவரைப்பார்த்து கயிலாசகிரியின் சிகரங்களில் மூன்றுசிகரங் கொண்டுபோய் மூன்றிடத்தில் வைப்பாயாக. அம்மூன்றில் ஒருமலையைத் தெரிசித்தாலும் நாம் எழுந்தருளியிருக்குங் கயிலாயத்தைத் தெரிசித்த பலனடைவார்களென்று கட்டளையிட்டனர். நந்தியெம்பெருமான மூன்று சிகரங்களையும் கொண்டு மூன்றிடத்தில் நாட்டினர். வடக்கே மல்லிகார்ச்சுனபுரம் ஒன்று. திருக்காளத்திமலை ஒன்று. திருக்கழுக்குன்றம் ஒன்று இத்தலத்திற்குவருபவர் ஸ்நானஞ்செய்து நியமமாகவந்து நந்திதீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்து ஸ்தலபுராணத்தை வாசித்துக் கொண்டாயினும் கேட்டுக்கொண்டாயினும் மெல்லநடந்து வேத கிரியை ஐந்துதரமாயினும் மூன்தரமாயினும் பிரதக்ஷிணஞ்செய்ய வேண்டும். தீர்த்தக்கரை முதலான இடங்களில் தாம்பூலம்உமிழலாகாது மற்ற அசுசிகளையும் செய்யலாகாது.

தலவிசிட்டச்சருக்க முற்றியது.

## ௨௰ - வது சுரகுருச் சருக்கம்.

சூதமாமுனிவர் மகாரிஷிகளைநோக்கித் திருவாய்மலர்கின்றார். சம்பு, ஆதியென்னு கழுகுவடிவ முனிவர்களால் திருககழுக்குன்ற மகிமையையறிப்த சுரகுரு அரசன் இத்தலத்தின் மகிமையைக்கேட்க நான் பூர்வத்தில் என்னபுண்ணியஞ் செய்தேனோவென்று முத்துமணி வெள்வாயனென்னு மந்திரியோடு சங்கு தீர்த்தத்தில்ஸ்நானஞ்

செய்து கிரிபிரதக்ஷிணஞ்செய்து மலையடிவாரத்தில் ஒருசிவலிங்க பிரதிஷ்டை செய்தனன். அவ்விலிங்கம் சுரகுருலிங்மொன்று பெயர் பெறும், அவ்வரசன் அம்மலையினுச்சியிலேறி மலைக்கொழுந்தாகிய சிவலிங்கப்பெருமானைத் தூரத்திற்கண்டு துதித்தனன். வேதகிரிநாதர் கடாக்ஷத்தால் அவ்வரசன்செய்த தீவினைகளும் அநாதியாயுள்ள ஆணவமலமும் நீங்கி அநேகக் கருங்காக்கைவடிவங்கொண்டு அவன் தலையினின்றும் உரோமத்துவாரத்தின் வழியாக வெளிப்பட்டு பேரிரைச்சலுடன் மேலெழும்பிப் பறந்து அவ்வேதமலைக்குத் தெற்கில் வீழ்ந்து ஓர் மலைவடிவமாயின. அம்மலைக்குக் காக்கைக்குன்றென்று வழங்கிவருகின்றது. அரசனும் மந்திரியும் ஸ்தலமகிமையை அநுபவமாகப்பார்த்து மலைவிட்டிறங்கி மூன்றுமுறை கிரிப் பிரதக்ஷிணஞ் செய்து சோகத்திப்பாபம் நீங்கும்வண்ணம் காடுகளை வெட்டிப் பூமியைதிருத்தி சந்திதீர்த்தத்துக்குப் படிகட்டுவித்துப் பக்தவச்சலேஸ்வரரென்னும் ஒரு சிவலிங்கப் பிரதிஷ்டைசெய்து பெண்ணினல்லாளென்னும் உமாதேவியாரை பிரதிஷ்டைசெய்வித்துக் காசிப்பதியினின்றும் ஆதிசைவர்களை வரவழைத்து அவர்களுக்குத் திருமாளிகை கட்டுவித்து மற்றைச் சாதியர்களுக்கும் திருநகரத்தை உண்டாக்கி ஆகமவிதிப்படி உற்சவாதிகளை நடபித்துக் கழுகுமுனிவருடைய அனுக்கிரகத்தைப் பெற்றுச் சுரகுரு அரசன் மகாபலிபுரத்தையடைந்து சிலநாளிருந்து திருக்கையிலாயபதம் பெற்றனவென்று திருவாய்மலர்ந்த சூதமகாரிஷியை நைமிசாரண்யமுனிவர்கள் துதித்துத் திருக்கழுக்குன்றத்தின் மகிமையைநினைந்து மனமுருகிக் கண்களில் ஆநந்தபாஷ்பஞ்சொரிந்து அத்தலத்தில் வாசஞ் செய்தனர் இப்புராண சரித்திரத்தை வாசித்தவர்களும், வாசிக்க வேண்டுமென்று சொன்னவர்களும். வாசிக்கக் கேட்டவர்களும், சிவபுண்ணியமுடையவர்களாய்ச் சித்தபரிபாகத்தை யடைந்து சிரேஷ்டமான தேவபதியைப் பெறுவார்கள்

௨௰-வது சுரகுருசருக்க முற்றியது.

திருக்கழுக்குன்றப் புராணவசனச் சருக்கம் நிறைவேறியது.

திருச்சிற்றம்பலம்,

---



உ

சிவமயம.

திருச்சிற்றம்பலம்.

# திருக்கழுக்குன்ற
# தேவாரம்.

## சுந்தரமூர்த்திசுவாமிகள்.

(பண் - நட்டபாடை.)

அர்ச்சுனை.

திருச்சிற்றம்பலம்.

கொன்றுசெய்த கொடுமையாற்பல சொல்லவே
நின்றபாவ வினைக டாம்பல நீங்கவே
சென்றுசென்றுதொழுமின்றேவர் பிரானிடங்
கன்றினோடுபிடி சூழ்தன்கழுக் குன்றமே. (௧)

இரங்கிச்சென்றுதொழுமி னின்னிசை பாடவே
பிறங்குகொன்றைச்சடைய னெங்கள் பிரானிட
நிறங்கள்செய்தமணிக ணித்திலங்கொண்டிழி
கறங்குவெள்ளையருவித் தண்மழுக் குன்றமே. (௨)

நீளநின்றுதொழுமி னித்தனுநீதியா
லாளுநம்மவினைக ளல்கி யழிந்திடத்
தோளுமெட்டுமுடைய மாமணிச்சோதியான்
காளகண்டனுறையுந் தண்கழுக் குன்றமே. (௩)

வெளிறுதீரத்தொழுமின் வெண்பொடியாடியை
முளிறிலங்குமழுவாளன் முந்தியுறைவிடம்
பிளிறுதீரப்பெருங்கைப் பெய்ம்மதமூன்றுடைக்
களிறினோடுபிடிசூழ்தண்கழுக் குன்றமே. (௪)

புலைகடாத்தொழுமின் புன்சடைப் புண்ணிய
னிலைகொள்சூலப்படைய னெந்தைபிரானிட
முலைகளுண்டுதழுவிக் குட்டியொடுமுசுக்
கலைகள்பாயும்புறவிற் றண்கழுக் குன்றமே. (௫)

மடமுடையவடியார் தம்மனத் தேயுற
விடமுடையமிடறன் விண்ணவர் மேல்வன்
படமுடையவரவன்றான் பயிலு மிடங்
கடமுடையபுறவின் றண்கழுக் குன்றமே. (௬)

ஊனமில்லாவடியார் தம்மனத்தேயுற
ஞானமூர்த்தி நட்டமாடி நவிலுமிடந்
தேனும்வண்டுமதுவுண் டின்னிசை பாடியே
கான்மஞ்ஞையுறையுந் தண்கழுக் குன்றமே. (௭)

அந்தமில்லாவடியார் தமமனத் தேயுற
வந்துநாளும் வணங்கிமாலோடு நான்முகன்
சிந்தைசெயதமலர்க ணித்தலுஞ்சேரவே
சந்தநாறும்புறவிற் றண்கழுக் குன்றமே. (௮)

பிறைகடாத்தொழுமின் பின்சடைப்பிஞ்ஞகன்
குழைகொள்காதன் குழன்றுளுறையுமிட
மழைகள்சாலக்களித்து நீடுயர்வேயவை
குழைகொண்முத்தஞ்சொரியுந் தண்கழுக்குன்றமே. (௯)

பல்லில்வெள்ளைத் தலையன்றான் பயிலுமிடங்
கல்லில்வெள்ளையருவித் தண்கழுக்குன்றினை
மல்லின்மல்கு திரடோளூரன் வனப்பினுர்
சொல்லல்சொல்லித்தொழுவாரைத் தொழுமின்களே.

திருச்சிற்றம்பலம்.

---

## திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள்.

பண் - குறிஞ்சி,

திருச்சிற்றம்பலம்.

தோடுடையானொருகாதிற்றூய குழைதாழ
வேடுடையான் றலைகலனாக விரந்துண்ணு
நாடுடையானள்ளிருளேம நடமாடுங்
காடுடையான் காதல்செய்கோயில் கழுக்குன்றே. (௧)

கேணவல்லான்கேழல் வெண்கொம்பு குறளாமை
பூணவல்லான்புரிசடைமேலோர் புனல்கொன்றை
பேணவல்லான்பெண்மகடன்னை யொருபாகம்
காணவல்லான் காதல்செய்கோயில் கழுக்குன்றே. (௨)

தேனகத்தார் வண்டதுண்டதிகள்கொன்றை
தானகத்தார் தண்மதிசூடி தலைமேலோர்
வானகத்தார் வையகத்தார்க டொழுதேத்துங்
கானகத்தான் காதல்செய்கோயில் கழுக்குன்றே. (௩)



துணையல்செய்தான் தூயவண்டியாழ்செய்சுடர்க்கொன்றை
பிணையல்செய்தான் பெண்ணினல்லாளையொருபாக
மிணையல்செய்யா விளங்கையினமூன்றுமெரியுண்ணக்
கணையல்செய்தான் காதல்செய்கோயில்கழுக்குன்றே. (௪)

பையுடைய பாம்பொடுநீறு பயில்கின்ற
மெய்யுடையான்வெண்பிறைசூடி விரிகொன்றை
மையுடைய மாமிடற்றண்ணன் மறிசேர்ந்த
கையுடையான் காதல்செய்கோயில் கழுக்குன்றே. (௫)

வெள்ளமெல்லாம் விரிசடைமேலோர் விரிகொன்றை
கொள்ளவல்லான் குறைகழலேத்துஞ் சிறுதொண்ட
ருள்ளமெல்லாமுள்கி நின்றாங்கேயுடனாடுங்
கள்ளம்வல்லான் காதல்செய்கோயில் கழுக்குன்றே. (௬)

ஆதல்செய்தானரக்கர்தங் கோனையருவரையி
னோதல்செய்தானொடிவரையின்கண் விரலூன்றிப்
போதல்செய்தான் பெண்மகடன்னோ டொருபாகங்
காதல்தெய்தான்காதல்செய்கோயில்கழுக்குன்றே. (௭)

இடந்தபெம்மானேனமதாயு மனமாயுக்
தொடர்ந்தபெம்மான்றூமதி சூடிவரையார்தம்
மடந்தைபெம்மான் வார்கழலோச்சிக் காலனைக்
கடந்தபெம்மானகாதல் சொய்கோயில்கழுக்குன்றே. (௮)

தேயநின்றான்றிரிபுரங்கங் கைசடைமேலே
பாயநின்றான் பலர்புகழ்ந்தேத்த வுலகெல்லாஞ்
சாயநின்றான்வன்சமண்குண்டர் சாக்கியரக்
காயநின்றான காதல்செய்கோயில்கழுக்குன்றே. (௯)

கண்ணுதலான் காதல்செய்கோயில் கழுக்குன்றை
நண்ணியசீர் ஞானசம்பந்தன் றமிழ்மாலை
பண்ணியல் பாற்பாடியபத்து மிவைவல்லார்
புண்ணியராய் விண்ணவரோடும் புகுவாரே. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

---

## திருநாவுக்கரசு சுவாமிகள்.

திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

மூவிலைவேற்கையானை மூர்த்திதன்னை முதுபிணக்காடுடையானை முதலானானை, ஆவினிலைந்துகந்தானை யமரர்கோனை யாலால முண்டுகந்தவையன்றன்னைப், பூவின்மேனான்முகனுமாலும் போற்

றப்புணர்வரிய பெருமானைப் புனிதன்றன்னைக், காவலனைக் கழுக்குன்றமமர்ந்தானைக் கற்பகத்தைக் கண்ணாரக்கண்டேனே. (க)

பல்லோடுதலைசடைமே லுடையான்றன்னைப் பாய்புலித்தோலுடையானைப் பகவன்றன்னைச், சொல்லோடுபொருளெந்து மானான்றன்னைச் சுடருருவிலென்பறாக்கோலத்தானை, அல்லாதகாலனை முன்னடர்ந்தான்றன்னை யாலின்கீழிருந்தானையமுதானானைக். கல்லாடைபுனைந்தருளுங் கபாலியைக் கற்பகத்தைக்கண்ணாரக் கண்டேனே.

திருச்சிற்றம்பலம்.

உ, ங, ச, ரு, சு, எ, அ, கூ, இவைகள் விடுற்றன

## ஸ்ரீமத் மாணிக்கவாசக சுவாமிகள்,

திருச்சிற்றம்பலம்.

பிணக்கிலாதபெருந்துறைப்பெரு மானுன்னாமங்கள்பேசுவார்க்
கிணக்கிலாததோரின்பமேவருந் துன்பமேதுடைத்தெம்பிரா
னுணக்கிலாததோர்வித்துமேல்விளை யாமலென்வினையொத்தபின்
கணக்கிலாத்திருக்கோலநீவந்து காட்டினாய்கழுக்குன்றிலே. (க)

பிட்டுநேர்பட மண்சுமந்த பெருந்துறைப்பெரும் பித்தனே
சட்டநேர்படவந்திலாத சழக்கனே னுனைச் சார்ந்திலேன்
சிட்டனேசிவ லோகனேசிறு நாயினுங்கடையாயவென்
கட்டனேனையுமாட்கொள்வான் வந்து காட்டினாய் கழுக்குன்றிலே.

கலங்கினேன் கண்ணினீரைமாற்றி பலங்கொடுத்த பெருந்துறை
விலங்கினேன் வினைக்கேடனேனினி மேல்விளைவதறிந்திலே
னிலங்குகின்றநின் சேவடிகளிரண்டும் வைப்பிடமின்றியே
கலங்கினேன் கலங்காமலேவந்து காட்டினாய்கழுக்குன்றிலே. (ங)

பூணொணாததொரன்புபூண்டு பொருந்திநாடோறும் போற்றவு
நாணொணாததொர்நாணமெய்தி நடுக்கடலுளழுந்திநான்
பேணொணாதபெருந்துறைப் பெருந்தோணிபற்றியுகைத்தலுங்
காணொணாத்திருக் கோலநீவந்து காட்டினாய்கழுக்குன்றிலே. (ச)

கோலமேனிவராகமேகுண மாம்பெருந்துறைக் கொண்டலே
சீலமேதுமறிந்திலாதவென் சிந்தைவைத்தசிகாமணி
ஞாலமேகரியாக நானுனை தச்சிநச்சிடவந்திடுங்
காலமேயுனையோதநீவந்து காட்டினாய்கழுக்குன்றிலே. (ரு)

பேதமில்லதொர்கற்பளித்த பெருந்துறைப் பெருவெள்ளமே
யேதமேபலபேசநீயெனை யேதிலார் முனமென்செய்தாய்
சாதல்சாதல்பொல் லாமையற்ற தனிச்சரண்சரணாமெனக்
காதலானுனையோதநீவந்து காட்டினாய்கழுக்குன்றிலே. (சு)



இயக்கிமாரறுபத்துநால்வரை யெண்குணஞ்செய்தவீசனே
மயக்கமாயதோர் மும்மலப்பழ வல்வினைக்குளழுந்தவு
மயக்கறுத்தெனை யாண்டுகொண்டுநின் றாய்மலர்க்கழறந்தெனைக்
கயக்கவைத்தடியார்முனே வந்துகாட்டினாய்கழுக்குன்றிலே. (எ)

திருச்சிற்றம்பலம்.

## பட்டினத்தடிகள்.

காடோசெடியோகடற்புறமோகனமேமிகுந்த
நாடோநகரோநகர்நடுவோநலமேமிகுந்த
வீடோபுறந்திண்ணையோதமியேனுடல்வீழுமிடம்
நீடோய்கழுக்குன்றிலீசாவுயிர்த்துணைநின்பதமே.

## மலைமருந்து.

மலைமருந்தென்பது வேதகிரிக்கு வடபுறம் சந்நிதிக்குக் கீழ்புறமுள்ள பிருதுவி. இதை எடுத்து ஜலத்திற் குழைத்து மேற்பூசின் பித்தபாண்டு, ஆறாதரிணங்கள், வீக்கம், தலைவலி, தேக எரிச்சல், கைகால்வலிகள், பிடிப்பு முதலிய பலரோகங்களும், உள்ளுக்குச் சாப்பிடின் வயிற்றுவலி, குன்மவகைகள், பலவித சூலை, குஷ்ட முதலாகிய பலரோகங்களும் ஆச்சரியமாய் நீங்குமென்பது அநுபவம். இப்பிருதிவியுள்ள பாரிசத்தின் மலையின்கண் சஞ்சீவி யிருப்பதாகப் பிரமாணம்.

கட்டளைக் கலித்துறை.

செய்பகமலத் திருவாழ் வளிக்குந் தியங்குமனைத்
தையமகற்றுமறிவே கொடுக்கு மடர்ந்தபிணி
நையநறுக்கு நமனையுருக்கு நளிகடல்சூழ்
வையந்துதித்திடும் வேதகிரீசர் மலைமருந்தே (க)

சூனியம்போக்கு பகைநீக்கும் வெய்யசுரந்தவிர்க்கும்
ஞானமுண்டாக்குமதன்போற் றிகழ்வுநயந்துதவும்
ஈனந்தவிர்க்கும் பசாசுகள் பூதத்திடாகற்றும்
வானவர்போற்றிடும் வேதகிரீசர் மலைமருந்தே. (உ)

சீர்கண்டமாலை தலைவலிபல்வலி சீதசுரம் மூர்க்கஞ்
செய்யும் விஷம்பீனிசங்காசமுதற் பலநோய் தீர்க்குஞ்
சமன்வலிநீங்கி மண்மேல் வச்சிரதேகந்தந்தே
மார்க்கண்டன் போல்வைக்கும் வேதகிரீசர் மலைமருந்தே. (ங)

கிரந்தஞ்செல்வந் தருமொருக்காலு நிலைதளரா
புரந்தரன் மாலயன் விண்ணோரியற்றிய பூசனைக்கு
உரந்தருங்கல்வி தருஞ்சிவஞானத் திண்மைதரும்
வரந்தந்தருள்செய்யும் வேதகிரீசர் மலைமருந்தே. (௪)

அருத்தைதத்தெழுத்துன்னி காலனையசமல் கண்மூக்குநுனி
பொருத்திக்கருப்பை மடமாதர் கோள்மறை பூதரத்தை
புருத்தியுடன் வலம்வந்திடுவோர்க் கிரங்கிருப்பிறவி
வருத்தந் தணித்திடும் வேதகிரீசர் மலைமருந்தே. (௫)

ஆதரத்தோடு மெழுத்தைந்துமோதி யரியநந்தி
சீதப்புனத்தடத்துள் மூழ்கிநித்தஞ் செயல்முடித்தே
ஓதியெழுத்தைந்தையு மடியாருடனே யுரைப்ப
வாதையகற்றிடும் வேதகிரீசர் மலைமருந்தே. (௬)

விடந்தீர்க்குஞ்சோர மிருகால்திருடன் விறல்கெடுக்கும்
கொடுஞ்சூலைவாத குன்மங்களை நீக்கும் கொலைபகற்றும்
மடஞ்சேர்மின்னார்கள் வசியமுண்டாக்கும் வரமளிக்குந்
தடஞ்சேர்புயத்தண்ணல் வேதகிரீசர் மலைமருந்தே. (௭)

பஞ்சமாபாதகந்தீர்க்கு மெஞ்ஞான்றும் பரிவுடனே
தஞ்சமென்றேநம்பி யுண்போர்க்கமுத சஞ்சீவிதாம்
வெஞ்சினத்தோர் செயுங் குத்திரஞ்சாய்க்கும் விறல்கொடுக்கும்
வஞ்சகமகற்றிடும் வேதகிரீசர் மலைமருந்தே. (௮)

கொலைவினைகுட்டங் கொலைநோயுங் குன்மம்கோளாடிய
பல்வினை தீயவிடப் பாண்டுநோய் பஞ்சபாதகமும்
தொல்வினையென்றும் தொலையாவினையுந் தொலைத்தடியேன்
வல்வினை தீர்த்திடும் வேதகிரீசர் மலைமருந்தே. (௯)

மூலவியாதிபொல்லாப் பாண்டுரோகமன மூர்ச்சைவலி
சாலவபாதிக்ஷய ரோகமியாவையும் தானடக்கும்
புரலசவுந்தரியோர்பாகன் மூவர்சொல்பாடல்கொள்ளும்
மாலையன்றேடிடும் வேதகிரீசர்மலைமருந்தே. (௧0)

கந்திக்காடஞ்சங் குதீர்த்தம் சம்பாதிமெஞ்ஞான நதி
வந்திக்கில் வாள்வருள் வனசொக்கவாறணைநீள்
அந்திப்பிறையணி வேதகிரீசரண்டம் மலைமண்சிந்திக்கினுள்
வினைநீங்கி மெய்ஞ்ஞானமுஞ் சேர்ந்திடுமே. (௧௧)

பள்ளிகொள்யாலயனும் வேதனும் தேடும் பரிபலத்தில்
தெள்ளியபூங் குழல் பெண்ணினல்லாளொடுசேர்ந்தமரும்
வள்ளற்பெருந்தகை வேதகிரீசர் மலைமருந்தை
அள்ளியுண்டால் யமன் தண்டனிட்டோடி யலறுவனே. (௧௨)

மலைமருந்து பதிகம் முற்றிற்று.

---



## கிரிப்பிரதக்ஷிண விதி.

சரீரபீடையால் வருத்தப்படுவோரும், கர்மவியாதியுடையோரும், இஷ்டகாமயாதி சித்திபெறவிரும்புவோரும், சிவபுண்யப் பேறடைய இச்சிப்போரும் இச்க்ஷேத்திரத்தில் வந்து தங்கி, பஞ்ச பஞ்ச உஷ்ணக்காலத்தில் எழுந்து, நித்தியக்கடனை முடித்து, சங்கு தீர்த்தத்தில் ஸ்நானம் செய்து, உலர்ந்த வஸ்திரம் உடுத்தி, விபூதி ருத்ராக்ஷமணிந்து, அவரவர்க்குறிய அனுஷ்டான ஜெபதபங்களைச் செய்துக்கொண்டு, சிவநாம உச்சரிப்போடு கிரிப்பிரதக்ஷணம் செய்துவரவேண்டும். பிறகு பக்தவற்சலப் பெருமானையும், அம்பாளையும், வணங்கி, சுத்தமான அன்னம் சமைத்து உண்டு, பகல் உறக்கமின்றி, தலபுராணச் சுருக்கமாவது, வேறுவகையான சத்கால க்ஷேபமாவது செய்யவேண்டும். மாலையிலும் இவ்வாறு சங்குதீர்த்த ஸ்நாநமும் பிரதக்ஷிணமும் செய்து பக்தவற்சலப் பெருமானையும் ஸ்ரீ திரிபுர சுந்தரியையும் அஷ்டோத்திரங்களால் அருச்சித்துப் பூசித்துவந்து, அற்ப ஆகாரமுண்டு உறங்கவேண்டும். இவ்வாறு நாற்பது நாளைக்குக் குறையாமல் பிரதக்ஷிணம் செய்யவேண்டும். வாரத்துக்கொருமுறை, மலைமேலேறி ஸ்ரீ வேதகிரிபெருமானுக்கு அருச்சனை புரிதல் உத்தமம். அன்றைக்குச் சாதுக்களுக்கு அன்னமளித்தல் உத்தமம். பிரதக்ஷணம் செய்துவருங்கால் இடை யிடையே கிரியைச்சுற்றிலுமுள்ள 18-வித தீர்த்தங்களில் விதிப்படி ஸ்நானம் செய்யவேண்டும். ஒரு மண்டலம் தீர்ந்ததும் கடைசியன்றைக்குத் தத்தம் சத்திக்கிசைய, ஸ்ரீ வேதகிரீசப்பெருமானுக்கும், ஸ்ரீ திரிபுரசுந்தரிக்கும், சுகமான அபிஷேகாதி அலங்காரஞ்செய்து வணங்க வேண்டும். சுத்த வைதீகப் பிராமணோத்தமர்களுக்கும் சாதுக்களுக்கும் தங்கள் பந்து மித்திரர்களுக்கும் அன்னம் அளித்து உதவ வேண்டும் கூடுமானால் விபூதிப்பை, உருத்திராக்கமணி, ஆடையாதிகளும் கொடுத்து உதவலாம். இவ்வளவும் முடிந்தபிறகு சத்பிராமணரைக்கொண்டு நவக்கிரகாதி ஓமங்கள் செய்து, விதிப்படி தானங்கள்செய்து, தத்தம் கிருகத்திற்குச் செல்லலாம். அநுகூலமாயிருக்கும் பக்ஷத்தில் பலமண்டலங்களும் பிரதக்ஷிணம் செய்யலாம். கிரிப்பிரதக்ஷிணம் செய்யும்போது வாகனமேறிச் செல்லுதலும், வீண்வார்த்தை பேசுதலும், வழியில் அசங்கியம்செய்து போதலும் ஒருக்காலும் கூடாவாம். கர்மவியாதியகளாயுள்ள பெருவியாதி, குஷ்டம் முதலிய வியாதியஸ்தர்கள் சங்குதீர்த்தத்தில் ஸ்நானம் செய்யும்போது ஜலத்தை கரைமேற்கொணர்ந்து குளித்தல் யாவருக்கும் சுகமாம்.

குறிப்பு.—மாதவிடாயாகும் ஸ்திரீகள் கிரிப்பிரதக்ஷிணம், அம்பாள் பிரதக்ஷிணம் செய்யும்போது மாதவிடாயான 6-ம் நாள் முதற்கொண்டு 15-நாள் வரையும் பிரதக்ஷிணம் செய்யவேண்டும். மறு

தளா

படியும் தூரமாகும்வரையும் பிரதக்ஷிணம் கூடாது. இவ்வாறு மூன்று பதினைந்து நாள் பிரதக்ஷிணம் செய்தால் ஒருமண்டலம் சரியாகும். ஏனெனில் பிரதக்ஷிணம் செய்யும்போது மாதவிடாயாவது பெரும்பாவத்துக்கிடம். இதை புண்ணியத்தை நாடும் ஸ்திரீகள் கவனிப்பார்களாக.

---

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீ திரிபுரசுந்தரி சகாயம்.

## திருக்கழுக்குன்றம்

# ஸ்ரீ திரிபுரசுந்தரியம்மை பதிகம்.

### காப்பு.

வேதபுரிவாழ் விமலரிடப்பாகமமர்
மாதுதிரிபுரவாமி மாலினிமே—போதமுற
வோர்பதிகம்பாடவுவந்ததவு மொற்றைக்
கூவிரயிற்று வண்டுவனக குன்று.

அரியமறை யொருநான்கு மளவிடற் கறியொணு வத்துவித வானந்தமே
அடியரித யங்களித் தகமெகிழ வருளுதவு மன்னையே யமலவாழ்வே
கருதரிய வருமாயை யாலீச ஜீவஜைக கற்பனைகொள் சிற்சடமதாய்
காரணங் காணவிவை யாவுமா யல்லவாங் காட்சியா யிலகுவடிவே
பெரியவெளி யாயெனது மனவெளியை யாக்கிடும் பேசொணுத் துரியநிலையே
பேரின்ப வாழ்வுற்ற பிறதாழ நெறியுரையும் பெரியரின மருவுமயிலே [லே
தெரிவுடையா ரெளியதெளி யறிவுடைய ரறியவருள் தெருளுடைய கருணைமுகி
தேவாதி தேவர்துதி வேதாத்ரி நாதபதி தேடுதிரி புரசுந்தரி. (௧)

மேசுநிக ரளகமேனுகரப் பணியழகும் முன்னெழிற் சுட்டியழகும்
மேலுலவு மதிநுதற் பொட்டின ழகும்மூக்கின் மின்னுமூக் குத்தியழகும்
போகமுற யாவர்க்கு மோகமன தாகவருள் பொழிகருணை விழியினழகும்
பொல்லாத வஞ்சுரை வீழ்த்திமெறி யுஞ்சூலம் பொலிகரராம் புயத்தினழகும்
வேகமுட னணுகவரு மகிடன்முது கிறவூன்று விஞ்சுசெஞ் சதங்கை தாளின்
வாகழகு மாகவென் மனமகிழ நின்றருளி மதியிலேன் காணவருவாய்
தேகமே தல்லவென தம்மையறி வானநிலை தெளியறிஞர் துதிதெய்வமே
தேவாதி தேவர்துதி வேதாத்ரி நாதபதி தேடுதிரி புரசுந்தரி. (௨)

ஓங்கார ரூபியாய் ரீங்கார நிலையாகி யொளிருஹ்ரீங் காரவடிவாய்
ஓதகர மந்த்ரமா யகலட் சணமாகி யொப்பிலா மகாபீஜ
மாங்குலவு நாதமாய் நாதாந்த வெளியாகி யணுகொணு வூமைமொழியா
யடியர்மல மறமிதய கமலபீ டிகைமருவு மம்மையே சாந்தமோன
நீங்கருந் துரியபத நிலையோங்கு சுகரூப நித்தியா நந்தவாழ்வே
நிலைபெற்ற கதியுற்ற நின்பதத் தகலாத நிட்டையெளி யேற்கருளுவாய்



தேங்கமுத கலையொ[...]நிருதற் சுழிமேனியொளிர் தெவிட்டாத வானந்தமே
தேவாதி தேவர்துதி வேதாத்ரி நாதபதி தேடுதிரி புரசுந்தரி. (௩)

உன்னரிய வகிலாண்ட கோடியொரு கணப்போதி லுற்பவஞ் செய்தமுதலே
உவமையற வைத்தொழிலு மாற்றிடப் பலமூர்த்தி யுருவங்கொள் சித்ரவடிவே
என்றனுல ரேயுயிர்த் துணையேயெ னன்பினுறு மேகாந்த மோனவாழ்வே
எக்கால முன்பத்தி மிக்காகவே கொண்டு யேகமன மாகவந்தே
பண்ணுறு மேவலஞ் செய்யுநின் பத்தரவர் பக்கத்தி ருந்துதவுவாய்
பணியுமவர் சந்தோட மாகவாழ் வுறவடிமை பதைபதைத் திடலுமழகோ
தென்னைகமு கொடுகதலி சேர்ந்துவளர் சோலைதிகழ்தேமருவு மெல்லைநாப்பண்
தேவாதி தேவர்துதி வேதாத்ரி நாதபதி தேடுதிரி புரசுந்தரி. (௪)

காமனுங் கோபனுங் கனமோக னும்லோப கன்னமத மாச்சர்யனுங்
கட்சிகொண் டெனையனுர் கைப்பெற்ற வெண்ணியங் கரணமாங் காவலன்பா
லேமவைப் பாமென்ன விஷயபோ கங்கொள்ளு மிந்திரியத் துணைவர்கூட்டி
யேமாற்றி னுரெனையு மறியாது போயினன் ஏதேது செய்ய விசைவான்
தாமாகவே தோற்றி தாரணியெ லாஞ்சுற்றி தனியாசு புரிபவன்போற்
றாவியெனை விஷபத்து ளாழ்த்தல்சகி யேனம்ம தற்பத் துறவருளுவாய்
தேமருவு சோலைவளர் பூமருவு தேனிசைசெய் தெரியலவி ளெண்டோளி னாய்
தேவாதி தேவர்துதி வேதாத்ரி நாதபதி தேடுதிரி புரசுந்தரி. (௫)

மீளாத மாயையான் மொத்துண்ட வங்கிணர்கள் மீட்சிபெற வழியின்றியே
மின்னனிகர் தேகமே யான்மமுறும் போகமே மிகுமுத்தி யாக நுகர்வர்
ஆராரெ னக்கேட்கி லறையவொரு பதிலிலா ரதற்குமேற் சாதியென்பா
ரணிசமய மென்பர்குல மாமென்ப ராசார மனைத்துமேற் கொண்டுதிரிவார்
நாளாக மறலிமற் காளாகு மப்போதி னடுக்கமுற் றேயழிகுவார்
நாணமொன் றில்லார்க ளுனெனும் பதமறியு நாளெந்த நாளோவிவர்
தேளாமெ னக்கண்டும் வாலதிகை வைப்பர்போற் றியங்கிரா காழ்வர்கண்டாய்
தேவாதி தேவர் துதி வேதாத்ரி நாதபதி தேடுதிரி புரசுந்தரி. (௬)

குன்மம்வெந் சோகைநீ ரிழிவுகா மாலைவெண் குட்டமது மேகவாதம்
குலைநோய் மகோதரம் தலைவலி விஷக்கடி குருதிகழி இராணிமூலம்
சன்னிமுகசன்னிசுக சன்னிபடு வன்பிளவை சயித்தியங் காசமீளை
சலதோஷமுறைசுரம் பாண்டுதொடை வாழைப்படர் தாமரை சுவாசரோகங்
கன்மநோயாமிவைகண் முதலாக வந்துநின் கழலடி வணங்குவோர்பாற்
கதிரவன்கிரணமுன் காணுத பனியெனக் கதறியே யோடவருள்வாய்
தென்னில் வஞ்சகர் புரஞ்செற்றவன் மகிழவரு செல்வமே சிலம்பின்மகளே
தேவாதி தேவர்துதி வேதாத்ரி நாதபதி தேடுதிரி புரசுந்தரி. (௭)

பூதமென திகவுடலை யானென்ன வெண்ணியே போக்கினே னனேகஜென்மம்
புத்திதெளி யாமலே பொன்னாசை பெண்ணாசை பூமியின தாசையோடும்
எத்முற விவையலா தின்பேது மில்லையென வெண்ணினே னீதன்றியும் [ல்
எவரேனு மொருபோதல் கடவுளென் றொன்றுண்டு என்றுமதையுணரவெண்ணி
போதமருள் மறையுண்டு யூகிக்க வறிவுண்டு புகலவனு பவமுமுண்டு [குவேன்
போக்குணர்மி னெனவென்செவி புகவொணு தம்மவோ புன்மையேனென்செய்
சேதனர்க ளோதரிய சிந்தையுரை செல்வமே செந்தா மரைப்பதத்தோய்
தேவாதி தேவர்துதி வேதாத்ரி நாதபதி தேடுதிரி புரசுந்தரி. (௮)

வஞ்சகக் கடையரை மடையரைக் கடியரை வம்பியர் ... கொடுநடையரை
வாதரைத் தீதரைக் கோதரைக் கொடியரை வலியரைக் கயவர்தம்மை
நஞ்சரை யிழிதொழில் நரகரை வெங்கலக நடையரை நாசநெஞ்ச
கலியரை புலையரை கொலையரை கொடுமொழிய ராவரை பகைகாமரை
மிஞ்சுமயன் மாதரை மனையவிடு போதரை மிரளவரு மெமதூதரை
வெருட்டரை புரட்டரை திருட்டரை மருட்டரை மேவிடா துன்னையுன்னு
தெருட்டரை யழிவற்ற நேசரை மறையோது தேவரை மேவவருள்வாய்
தேவாதி தேவர்துதி வேதாத்ரி நாதபதி தேடுதிரி புரசுந்தரி. (௯)

இதுபொய்யிது மெய்யென்ன தெளிவுறுவிவேகமும் இருபபதை யடைவிருப்பும்
இல்லாத மாயையா வியங்கியொளிர் மூவுலக விச்சையறுமண வெறுப்பும்
சதுமுக்ன் முதலியோர் சாதித்த வறுவிதச் சமாதிசம் பத்தையுறவும்
சற்சனர்க ணையமும் சாத்திரவிசாரமும் சதாநந்த நிட்டைபடைவும்
மதியிலாச் சிறியவர டேசன்மொழி புன்சொற்கள் மதித்தடிமை யாக்கியாளு
மாட்சியும் மெஞ்ஞான வாட்சியுந் தந்தருள மனமுவந்தருள் க்ருபாட்சியே
செதிள்வரா லுகளுதேய் பண்ணைசூழ் வளமருவு திருக்கழுக் குன்ற மேவும்
தேவாதி தேவர்துதி வேதாத்ரி நாதபதி தேடுதிரி புரசுந்தரி. (௰)

---

## ஸ்ரீ திரிபுரசுந்தரியம்மன் பேரில்

139965

## நவகம்.

---

காரகொண்ட சைவலக் குழலு மொளி மேவுதண் கதிர்நிகர் செழித்த நுதலும்
கருணைகூர் விழிகளும் செங்குமுத வாயும் கனக்குழை விளங்குகதும்
ஏர்கொண்ட வெண்பணில கந்தரமு மாழிசங் கேந்து கரமலர்களும் பொன்
இலகுமங் கலநா ணருங்கலந் திகழ்மார்பும் இழையொன்றை யனைய இடையும்
பார்கொண்ட விலையின்மே கலையரையும் நீள்நறம் பதுமபாதத் துணைகளும்
படிமீதி லடியேனை மிடியாதி தொடாரத படிசேவை நெடிதே யருள்
சூர்கொண்ட வமரருள் பேர்கொண்ட சீர்கண்டு தொண்டுபுரி வேதமலைவாழ்
சுபசகித விபவவா நிபரகித தபத்ரிபுர சுந்தரி சுகாநந்தியே. (௧)

தனமுண்டு மறதியும் குற்றமு மிலாக் கல்வி தானுண்டு சற்புதல்வ ராம்
சம்பத்து மேன்மேலு முண்டுநோ யணுகாத தன்மை யுண் டெவர்களாலும்
கனமுண்டுபண் ணுநற் குணமுண்டு மெய்த்தொண்டு நண்டு வளர்சிவனடியர்தம்
கருதரிய பெருநேச முண்டு சிவநேசம் கதித்தெழுந் தருகு முண்மை
மனமுண்டு சொலுமிம்மை யம்மையில் ஈயிலாய வாழ்வுண்டு தாழ்வையிலை[ட்ரால்
மண்டலமும் விண்டலமு மன்றுதுதி கொண்டகழல் வண்டளன சேவைகண்
சொனமுண்ட திருமேனி யண்ணலார் வாமம் துளங்கவரு வேதமலைவாழ்
சுபசகித விபவவா நிபரகித தபத்ரிபுர சுந்தரி சுகாநந்தியே. (௨)

...சுந்தர்ம் ரு.
139965